வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 05
06.07.2024 சனிக்கிழமை
இதழ் : 187
பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை:


# மருத்துவர்கள் வேலை நிறுத்தத்தால் விடுதி நோயாளர்கள் வெளியேறினர்!

## தீர்வு காண திங்களன்று பேச்சு

தென்மராட்சி, ஜூலை 06

சாவகச்சேரி மருத்துவமனையில் தொடரும் பணிப்புறக்கணிப்பால் அங்கு விடுதிகளில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்கள் வெளியேறியுள்ளனர். இதேநேரம், இரு நாட்களாக தொடர்ந்த வேலை நிறுத்தத்தால் அந்த மருத்துவமனையை நம்பியுள்ள பொது மக்கள் பலரும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

11



## ஜனாதிபதி பதவிக் காலம்; விரைவில் புதிய சட்டமூலம்

ஐ.தே.க. கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 16

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பான குழப்பநிலை காணப்படுவதாகவும் அதனை ஆராயும் நோக்கில் அமைச்சரவையில் யோசனை ஒன்றை ஜனாதிபதி முன்வைத்துள்ளதாகவும் ஐக்கிய தேசிய கட்சி அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வருவதற்கும்

11

## கிணற்றில் புதைக்கப்பட்ட யுவதியின் சடலம் மீட்பு!

மூதூர், ஜூலை 06

காதலனால் கொல்லப்பட்டு பாழடைந்த கிணற்றில் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் யுவதியின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

திருகோணமலை - சேருவில - தங்கநகரை சேர்ந்த நடேஸ்குமார் வினோதினி (வயது 25) என்ற பெண்ணின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

11

## பிரிட்டன் பாராளுமன்ற தேர்தல் யாழ். வம்சாவழி பெண் வெற்றி!

லண்டன், ஜூலை 06

பிரிட்டன் பாராளுமன்றத் தேர்தலில் முதன் முதலாக இலங்கை தமிழரான - யாழ்ப்பாண வம்சாவழியை சேர்ந்த பெண்ணான உமா குமரன் வெற்றி பெற்றுள்ளார்.

தொழில் கட்சியின் சார்பில் போட்டியிட்ட அவர், 19 ஆயிரத்து 145 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

பிரிட்டன் பாராளுமன்றத் தேர்தல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை

11



## கடன் மறுசீரமைப்புகள் மூலம் 800 கோடி டொலர் நிவாரணம்!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூலை 06

கடன் மறுசீரமைப்பு செயல்பாடுகளுடன் இணைந்ததாக இரு தரப்புக் கடன் வழங்குநர்களிடமிருந்து 500 கோடி டொலர் கடன் வட்டி நிவாரணம் கிடைக்கவுள்ளது. அத்துடன், வர்த்தகக் கடன் வழங்குநர்களின் இணக்கப்பாட்டின் பிரகாரம், 300 கோடி டொலர் கடன் இரத்து செய்யப்படும். இதன் மூலம், நாட்டுக்கு 800 கோடி டொலர் நிவாரணமாகக் கிடைக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குருநாகலில் உறுமய திட்டத்தின் கீழ் காணி உறுதி

11

## ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலை முடக்குவதற்கு எத்தனிக்கிறார் ரணில்!

செல்வராசா கஜேந்திரன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 06

ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலை முடக்கும் செயற்பாடுகளை ஜனாதிபதி ரணில் முன்னெடுத்து வருகிறார் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவியை பெற்றுக்கொள்வதற்காக சலுகைகளுக்கு விலை போகக் கூடியவர்களை

11



## இரா. சம்பந்தனின் பூதவுடல் திருமலையை வந்தடைந்தது

திருகோணமலை, ஜூலை 06

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மறைந்த பெருந் தலைவர் இரா. சம்பந்தனின் பூதவுடல் யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை திருகோணமலையை வந்தடைந்தது.

11

## யாழ். பொலிஸ் பிராந்தியத்துக்கு புதிய அத்தியட்சர்

யாழ்ப்பாணம், ஜூலை 06

யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகராக சூரிய பண்டார நேற்று வெள்ளிக்கிழமை கடமைகளை பொறுப்பேற்றார்.

யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனையில் சர்வமத தலைவர்களின் ஆசியுடன் அவர் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இந்த நிகழ்வில், யாழ்ப்பாண பிராந்திய உதவி

11

## மீனவர் பிரச்னை தீர்வுக்காக இந்தியாவுடன் மீண்டும் பேச்சு

புதுடில்லிக்கு வருமாறு தனக்கு அழைப்பு என்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 06

இந்திய கடற்றொழிலாளர் விவகாரத்துக்கு தீர்வு காண இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் இணக்கம் தெரிவித்துள்ளார். இதற்காக, தன்னை புதுடில்லிக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன், தடைப்பட்டுள்ள இரு நாடுகளுக்கும் இடையிலான மீனவர் தொடர்பான

11

## விபத்தில் நால்வர் பலி!

கொழும்பு, ஜூலை 06

லொறி கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் நால்வர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்; மூவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை

11

கொக்குத்தொடுவாய் புதைகுழி:

## பிரதான வீதியும் அகழப்படுகின்றது!

முல்லைத்தீவு, ஜூலை 06

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி காணப்படும் பிரதான வீதியை அகழும் பணி நேற்று ஆரம்பமானது.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணி நேற்று வெள்ளிக்கிழமை இரண்டாம் நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, ம்னித புதைகுழி

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

நண்பர் ஒருவரிடமிருந்து ஒரு குறுந்தகவல் வந்தது. திறந்து பார்த்தால் தெல்லிப்பழையில் ஆறு. திருமுருகனார் நடத்தும் சிறுவர் இல்லம் மூடப்பட்டதாக வெளிவந்த பத்திரிகையின் பிரதி.

கூடவே "என்ன நடக்கிறது என்று பாருங்கள்" என்ற குறிப்பு வேறு.

செய்தியை முழுமையாக படித்த பின்னர், அவருக்கு ஒரு குறிப்பை அனுப்பினேன்.

என்ன நடந்தது என்பது பற்றி வேறு எவரிடமும் கேட்காமலே செய்தியிலிருந்து புரிந்துகொண்டதை வைத்துக்கொண்டு, நான் அனுப்பிய குறிப்பில், மலையகத்திலிருந்து வந்த பிள்ளைகள் குளிப்பதற்காக தற்காலிகமாக ஏற்பாடு செய்யப்பட்ட தொட்டியை கமராவுக்கு முன்னால் வைத்தது தவறாக இருக்கலாம். கமராவையோ அல்லது குளியல் தொட்டியையோ மாற்றிவைக்குமாறு சொல்வதற்கு பதிலாக அந்த இல்லத்தையே எதற்காக மூடவேண்டும்? என்று அந்த நண்பரிடமே கேட்டு எழுதினேன்.

தெல்லிப்பழையில் துர்க்கை அம்மன் கோவில் கட்டப்பட்ட பின்னர், அந்த ஆலயம் பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபடத் தொடங்கியிருந்தது. அந்தப் பணியைத் தொடக்கி வைத்தவர் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார்.

அவர் ஆலயத்தை அமைத்து அதனுடன் சேர்ந்து மகளிர் இல்லம், முதியோர் இல்லம் என்று சமூகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, அவரின் அந்தப் பணிகளை விதந்து பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதிய கட்டுரை ஒன்று அப்போது ஞாபகத்துக்கு வந்தது.

அந்த வேளையில் இன்னுமொரு விடயம் ஞாபகத்துக்கு வருவதையும் தவிர்க்கமுடியவில்லை.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவிலிருந்து ஒலித்த தமிழ் வானொலி "வெரித்தாஸ்" பற்றி அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். அந்த வானொலியில் தொண்ணூறுகளின் கடைசிப் பகுதியில் இயக்குநராக இருந்தவர் அருட்பணியாளர் ஜெகத் கஸ்பர் ராஜ் அடிகளார். ஒரு தடவை அவரோடு பேசிக்கொண்டிருந்தபோது, மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி என்ற "அம்மா"பற்றி பேச்சு வந்தபோது அவர் சொன்னார்:

"மனிதர்கள் தங்களைக் கடவுள்கள் என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், இந்த மேல்மருவத்தூர்காரர் ஒரு தமிழன் என்பதாலும், அவர் என்ன செய்தாலும் அதனோடு மருத்துவக் கல்லூரி, பல்கலைக்கழகம், வைத்தியசாலை என்று சமூகப் பணியாற்றுவதாலும் அவரை நான் ஆதரிப்பதுண்டு" என்றார்.

ஆலயங்கள் இவ்வாறு ஆன்மீகப் பணிகளோடு சமூகப் பணிகளில் ஈடுபடுவது அரிது. ஆனால், அவ்வாறு ஈடுபடும் சேவையை நமது மண்ணில் தொடக்கி வைத்தவர் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார். அவர் தொடக்கிவைத்த அந்தப் பணியை இன்றும் தொடர்வதோடு, இன்னும் அதிகமாக - நமக்கு எது தேவையோ அவற்றை உய்த்து உணர்ந்து செய்து வருகிறார் ஆறு. திருமுருகனார்.

யாழ்ப்பாண நகரத்தின் நுழைவாயிலான நாவற்குழியில் திருவாசக அரண்மனை, அரும்பொருட் காட்சியகம் என்பன அவரின் இந்தப் பணிகளை பறைசாற்றுகின்றன.

அவரின் பணிகள் பற்றி அவ்வப்போது சிலர் விமர்சித்து வரும்போது, "காய்க்கின்ற மரத்துக்கு கல் எறி விழத்தான் செய்யும்" என்று எண்ணுவதுண்டு.

ஒரு பணியை அல்ல, பல பணிகளை ஒரே நேரத்தில் செய்கின்ற போது அவற்றில் தவறுகளை தேடிப் பிடிக்க நினைத்தால் பிடித்துக் கொண்டே இருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்கின்றவர்கள், சமூக அக்கறையோடு செய்யாமல், தமது சொந்த விருப்பு - வெறுப்புகள் காரணமாக "கல் எறி"கின்றபோது அவற்றை கடந்து செல்ல முடியவில்லை.

இப்போது அவர் தனது சட்டத்தரணி மூலம் குறித்த செய்தியை வெளியிட்ட பத்திரிகையிடம் நஷ்ட ஈடு கோரி கடிதம் அனுப்பியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருக்கின்ற ஒரு விடயம் மிகவும் கவனத்திற்குரியது.

அந்தப் பத்திரிகை அலுவலகம் அமைந்திருக்கின்ற காணிக்கு ஒரு காலத்தில் சொந்தக்காரர்கள், முதல் தமிழ் சட்டமா அதிபரான சிவா பசுபதி குடும்பத்தினர். அந்தக் காணியில் அவர்கள் கட்டிய புதிய வீடும் அவர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த பழைய வீடும் இருக்கின்றது.

அங்கே யுத்த காலத்தில் சில நாட்கள் விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் குடியிருந்ததாகக் கூறப்படுகின்றது. அவர் அங்கிருந்து வெளியேறிய பின்னர், அது அந்தப் பத்திரிகை நிறுவனத்தினரால் பயன்படுத்தப்பட்டு வந்தநிலையில் அவர்கள் அதனை விற்பதற்கு முயன்றபோது, தாங்கள் அங்கே பல தசாப்தங்களாக இருப்பதால் தமக்கே தரவேண்டும் என்று பிடிவாதமாக இருந்ததால், அங்குள்ள புதிய வீட்டையும் அதனோடு இணைந்த காணியையும் மாத்திரம் அவர்களுக்கு விற்றுவிட்டு, தமது பரம்பரை வீட்டையும் அதனோடு இணைந்த காணியையும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் சிவபூமி அறக்கட்டளைக்கு வழங்கியிருக்கின்றனர். கூடவே, அந்த பழையவீட்டில் வைத்து அன்னதானம் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யுமாறு கேட்டிருக்கின்றனர்.

இதனால் குறித்த பத்திரிகைக்கும், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான சிவபூமி அறக்கட்டளைக்கும் (அதன் தலைவர் ஆறு. திருமுருகனுக்கும்தான்) இடையே சில காலமாக நடந்துவரும் இழுபறியைத் தொடர்ந்தே இந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாக நகரத்தில் பேசப்பட்டுவந்தது.

இந்த நிலையில் ஆறு. திருமுருகனார் அனுப்பியுள்ள கேள்விக்கடிதத்திலும் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இந்த குரோதம் காரணமாகவே அவ்வாறு தவறான செய்தியை பிரசுரித்ததாகவும் குற்றம்சாட்டியிருக்கிறார்.

இவையல்ல இங்கே நாம் கவனிக்க வேண்டியது,

"ஆறு. திருமுருகனால் நடத்தப்படும் சிறுவர் இல்லம் இழுத்து மூடல்" என்று தலைப்பிட்டு செய்தி வெளிவந்துள்ளபோதிலும்,

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்ததுபோல, அந்த செய்தி வெளிவந்த தினத்துக்கு முன்னதாக அப்படியோர் உத்தரவை ஆளுநர் விடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருப்பதுதான். இவற்றை பார்க்கின்ற போது, "சிலர் சொந்தக் காசில் சூனியம் வைப்பது" என்று சொல்வது இதுபோன்றதைத்தானோ?

**ஊர்க்குருவி**

# சம்பந்தன் என்ற தமிழ் தேசிய இன போராளியின் குரல் ஓய்ந்துவிட்டது

## வட மாகாண அவைத் தலைவர் சீ. வீ. கே.சிவஞானம்



யாழ்ப்பாணம், ஜூலை 06

தனது இளமைக் காலத்தில் இருந்தே தமிழையும், தமிழ் மண்ணையும் - கலாசாரத்தையும் - இன அடையாளத்தையும் - பண்பாடுகளையும் இறுதி வரை நேசித்து ஓங்கி ஒலித்த - திருமலை தந்த இரா. சம்பந்தன் என்ற தமிழ் தேசிய இனத்தின் போராளியின் குரல் ஓய்ந்துவிட்டது - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம்.

தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் மறைவையொட்டி அவர் நேற்று விடுத்த இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த செய்தியில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இன விடுதலை வேட்கையையும் விடுதலை போராட்ட உணர்வையும் இனங்கண்ட தந்தை செல்வநாயகம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் இணைத்துக் கொண்டார். இதனை ஒருமுறை தந்தை செல்வா நினைவிடத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோது மனநெகிழ்ச்சியோடு என்னுடன் பகிர்ந்து கொண்டமையையும் அவர் தந்தை செல்வாவின் மீது வைத்திருந்த அதீதபற்றையும் நான் பார்த்திருக்கின்றேன்.

இவ்வாறு தந்தை செல்வாவால் தேடி அரசியலுக்கு கொண்டு வரப்பட்டபோது சம்பந்தன் ஐயா திருமலையில் பெரும் வருமானம் ஈட்டும் சட்டத் தரணியாக சட்டத்துறையில் திகழ்ந்தவர். அவ்வாறான வருமானத்தை முழுமையாக கைவிட்டே 1977ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து 2001ஆம் ஆண்டிலிருந்து இறுதி வரை திருமலையின் பாராளுமன்ற பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் செயல்பட்டு எல்லோரையும் அரவணைத்துச் சென்றவர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரை 2001ஆம் ஆண்டிலிருந்து 2014 வரை அதன் தலைவராகவும் அதன் பின்னர் அதன் பெருந்தலைவராகவும் செயல்பட்டவர்.

அவருடைய ஆற்றல், அறிவுடமை, அனுபவம், அரசியல் அணுகுமுறை காரணமாக தெற்கத்திய சிங்களத் தலைவர்களாலும் கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியிலும் மதிக்கப்பட்டவர். அவ்வாறே சர்வதேச மட்டத்திலும் மதிக்கப்பட்டவர். பிற்காலத்தில் அவரின் உடல் நிலை தளர்வடைந்த போதும் அவரின் அற்புதமான நினைவாற்றல் தளரவே இல்லை.

தாம் ஏற்றுக் கொண்ட கொள்கையையும் கருத்துகளையும் எவர் முன்னிலையிலும் மேசையிலே அடித்துக் கூறும் உதாரத்துக்கு அவர் உதாரணமாக விளங்கினார். இதனாலேயே பல்வேறு உயர் மட்டத்தினரும் அவரை வீடு தேடிச் சென்று சந்தித்தனர். பல்வேறு சூழ்நிலை மாற்றங்களின்போதும் தமிழ்த் தேசியப் பிரச்னைக்கு தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையோடு செயல்பட்டவர்.

சம்பந்தன் ஐயா திருமலை காளி அம்பாளில் மிகத் தீவிர நம்பிக்கை கொண்ட ஒருவர். அதனாலேயே தாம் சரியெனக் கருதியவற்றை எந்தக் கரவுகளுமின்றி வெளிப்படையாகவே கூறி வந்தவர். "உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்து ளெல்லாம் உளன்" எனும் வள்ளுவர் வாக்குக்கு அமைய தமக்கு சரியெனப் பட்டதை துணிந்து கூறி எம்மை வழி நடத்திய பெருந்தகை சம்பந்தன் ஐயா. எம் எல்லோரின் உள்ளங்களில் நினைவு நிலையில் இருப்பார் என்பது திண்ணம் - என்றுள்ளது. (ஐ)

# கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் தன்னார்வத் தொண்டர்கள் குழு இலங்கைக்கு!

கொழும்பு, ஜூலை 06

கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (கொய்க்கா) ஏழு தன்னார்வத் தொண்டர்களை கொண்ட குழு ஜூலை மாதம் முதலாம் திகதி இலங்கையை வந்தடைந்தது. இலங்கைக்கு வருகை தந்த நான்காவது தன்னார்வத் தொண்டர்கள் குழு இதுவாகும்.

இந்த குழுவானது கொழும்பு ஊறுகொடவத்தையில் உள்ள இலங்கை கொரியா தேசிய தொழிற்பயிற்சி நிறுவனம், மஹரகமவில் உள்ள தேசிய இளைஞர் சேவை மன்றம், பொரளையில் உள்ள கொரியா தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, கேகாலை தொழில்நுட்ப கல்லூரி மற்றும் பேருவளை டி.எஸ். சேனநாயக்க கல்லூரி ஆகியவற்றுக்கு செல்லவுள்ளது. (அ)

# அரசமைப்பு ஓட்டையைப் பயன்படுத்தி பதவிக்காலத்தை நீடிக்க ரணில் முயற்சி

## மயந்த திஸாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 06

அரசியலமைப்பின் ஓட்டையைப் பயன்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக்காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்க முயற்சித்தால் அது ஜனநாயகப் பிழை என பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி ஒருவர் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

அதன்படி, நாட்டின் ஜனநாயகம் மற்றும் அரசியல் சாசனத்தைப் பாது காக்க உயர்நீதிமன்றம் சரியான தீர்ப்பை வழங்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தி நம்புகிறது.

ஜனநாயகத்தை பாதுகாத்து, ஜனநாயக ரீதியில் நாட்டு மக்களுக்கு உரிமையை பெற்றுக்கொடுத்து, தேர்தல் ஆணைக்குழுவுக்கு எவ்வித இடையூறும் இன்றி தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிலைமைகளை அரசாங்கம் தயார் செய்ய வேண்டும்.

அடுத்த அரச தலைவரை தெரிவு செய்யும் போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச நிச்சயமாக களமிறங்குவார் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
06.07.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், ஆனி 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சர்வதேச நன்கொடையாளர் மகாநாடு

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ சர்வதேச நன்கொடையாளர் மகாநாட்டை நடத்தவுள்ளார் என்று தெரிவித்திருக்கின்றார். இதே போன்றதொரு வாக்குறுதியை கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின்போதும், தெரிவித்திருந்தார். ஆனால், ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்றதும் அவரின் வாக்குறுதி காணாமல் போய்விட்டது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தென்னிலங்கை வேட்பாளர்கள் அனைவருமே வாக்குறுதிகளைத் தாராளமாக வழங்குவதுண்டு. ஆனால், “ஆற்றை கடக்கும் வரையில்தான் அண்ணன் தம்பி - அதன் பின்னர் நீ யாரோ - நான் யாரோ” என்பது போல் நடந்துகொள்வது உண்டு. சஜித் பிரேமதாஸவின் சர்வதேச நன்கொடையாளர் மகாநாட்டின் கதையும் அப்படியான ஒன்றுதான்.

விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சு காலத்தில் 2003இல் சர்வதேச நன்கொடையாளர் மகாநாடு ஒன்று ரோக்கியோவில் நடைபெற்றது. இதில், 51 நாடுகள் பங்குபற்றியிருந்தன. இருபது சர்வதேச நிதி முகவரமைப்புகள் பங்குகொண்டிருந்தன. 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் உதவியை பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டியெழுப்பும் நோக்கிலேயே குறித்த மகாநாடு நடைபெற்றது.

இந்த மகாநாட்டை சமாதான பேச்சின் ஒரு பங்காளரான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நிராகரித்திருந்தது. விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார கட்டமைப்புக்கான கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்திருந்த நிலையிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பு குறித்த மகாநாட்டை புறக்கணித்திருந்தது. இருக்கின்ற அரசியல் அமைப்பின்கீழ் அரசாங்கம் சில மாற்று ஏற்பாடுகளை முன்வைத்தபோதிலும் விடுதலைப் புலிகள் அமைப்பு அதனை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் விடுதலைப் புலிகளின் பங்குபற்றல் இன்றியே குறித்த மகாநாடு நடைபெற்றது.

அவ்வாறானதொரு மகாநாட்டை நடத்தப் போவதாகவே சஜித் கூறுகின்றார். எந்த அடிப்படையில் அவ்வாறானதொரு மகாநாட்டை நடத்த முடியும்? அதில், தமிழ் மக்களின் சம அந்தஸ்துக்கான இடம் என்ன? வடக்கு, கிழக்கின் அதிகாரத்தை தீர்மானிப்பதில் தமிழ் மக்களுக்கு எந்தவொரு பங்களிப்பும் இல்லாதபோது அவ்வாறானதொரு மகாநாடு நடைபெற்றால்கூட அதனால் தமிழ் மக்கள் பயனடைவார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

வடக்கு, கிழக்கை மையப்படுத்தி இவ்வாறான கொடையாளர் மகாநாடு நடத்தப்படுவதற்கு முன்னர் முதலில், வடக்கு - கிழக்கு மாகாண சபை நிர்வாகம் தடையின்றி இயங்க வேண்டும். ஆளுநரின் தேவையற்ற தலையீடுகள் இல்லாதொழிக்கப்பட வேண்டும். தற்போது, மாகாண சபைகளுக்கான அரசியல் தலைமைத்துவம் இல்லாத நிலையில் ஆளுநர்கள் தனிக்காட்டு ராஜாக்களாகவே நடந்து கொள்கின்றனர். அவர்களின் உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டுப் பழகிய அதிகாரிகள் குழு மத்திக்கு அடிபணியும் அதிகாரத் தரப்பாகவே இருக்கின்றது. மாகாண சபைத் தேர்தல் நடத்துவதை திட்டமிட்டு புறக்கணிப்பதன் மூலம் மத்திக்கு மட்டுமே விசுவாசமாக இருக்கும் அதிகாரிகள் குழுவொன்று திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றது. இதன்மூலம் மாகாண சபையை எப்போதுமே, சிக்கலானதொரு நிர்வாகக் கட்டமைப்பாகக் காட்டுவதுதான் நோக்கமாகும். இந்த விடயங்களை சரி செய்யாமல் நன்கொடையாளர் மகாநாடு நடத்துவதால் என்ன பயன்?



## இரா. சம்பந்தனுக்கு நல்லூரில் அஞ்சலி!



யாழ்ப்பாணம், ஜூலை,07

தமது கட்சியின் மறைந்த பெருந்தலைவர் இரா. சம்பந்தனுக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நல்லூர் தொகுதிக் கிளை நேற்று அஞ்சலி செலுத்தியது.

இந்த நிகழ்வு நல்லூர் தொகுதி கிளையின் தலைவரும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நல்லூர் தொகுதி கிளை பணிமனையில் நடந்த இந்நிகழ்வில் நினைவுச்சுடரை நல்லூர் தொகுதி கிளையின் செயலாளர் இ. இராஜ தேவன் ஏற்றி வைத்தார்.

இரா. சம்பந்தனின் திருவுருவ படத்துக்கு சீ. வீ. கே. சிவஞானம், இராஜதேவன் இணைந்து மலர் மாலை அணிவித்தனர். தொடர்ந்து நிகழ்வில் பங்கேற்றவர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர்.

இதைத் தொடர்ந்து, சீ. வீ. கே. சிவஞானம் நினைவுரை ஆற்றினார். இந்த நிகழ்வில் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## பத்து நாட்களுக்குள் 1200 அலுவலகங்கள்!

### ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்துள்ள ரணிலின் திட்டம்

கொழும்பு, ஜூலை 06

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரசார நடவடிக்கைகளுக்காக கொழும்பு மாவட்டத்தில் 1200 அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளதாக கட்சியின் தேசிய செயலாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்து நாட்களுக்குள் குறித்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து கொழும்பு மாவட்டத்தில் புரட்சியை ஏற்படுத்தி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றியடையச் செய்வதற்கு தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி தேர்தலில் கட்சி சார்பற்ற பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க போட்டியிட தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## இரண்டு சிறுமிகள் துஷ்பிரயோகம் தலைமறைவாக இருந்தவர் கைது!

கொழும்பு, ஜூலை 06

இரு சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்து தலைமறைவாக இருந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக நிக்கவரெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர், தேரர் ஒருவரை போன்று வேடமணிந்து அநுராதபுரம் பிரதேசத்தில் தலைமறைவாகியிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

48 வயதுடைய மேலதிக வகுப்பு ஆசிரியரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் 14 மற்றும் 16 வயதுடைய இரண்டு சிறுமிகளை பாலியல் துஷ பிரயோகம் செய்து சுமார் 8 மாத காலமாக தலைமறைவாக இருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங் களை சொல்லித் தருவார். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**இடபம்**
கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் புதுதொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**மிதுனம்**
மறதியால் விலை உயர்ந்த பொருட்களை இழக்க நேரிடும். வியாபாரத்தில் வேலையாட்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். விட்டுக் கொடுத்துப் போக வேண்டியநாள்.

**கடகம்**
குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். வேலைச்சுமை இருக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். உங்கள் கை ஓங்கும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள்.

**கன்னி**
உங்கள் செயலில் வேகம் கூடும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பொறுப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில சமயங்களில் விரக்தியாக பேசுவீர்கள். வியாபாரத்தில் புது முயற்சிகள் வேண்டாம்.மற்றவர்களின் வேலைகளையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**மகரம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணம் ஒன்று கிடைக்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கும்பம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**மீனம்**
புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலை தீர்ப்பீர்கள். திடீர்பணவரவு உண்டு. வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

# வெள்ளை அறிக்கை வெளியிட தமிழக அரசு தயங்குவது ஏன்?

**அண்ணாமலை கேள்வி**



திருச்சி, ஜூலை 06

நீட் பரீட்சை குறித்த விவரங்களை வெள்ளை அறிக்கையாக வெளியிட தமிழக அரசு தயங்குவது ஏன் என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கேள்வியெழுப்பினார்.

திருச்சியில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் ஆளுங்கட்சியின் அத்துமீறலையும் மீறி பா. ம. க. வெற்றி பெறும். இந்தத் தேர்தலில் 3 அல்லது 4 ஆவது இடத்துக்கு சென்றுவிடுவோம் என்ற அச்சத்தில்தான், அ. தி. மு. க. போட்டியிடவில்லை. தி. மு. க. என்ற 'ஏ' அணி வெற்றிபெற, அ. தி. மு. க. என்ற 'பி' அணி போட்டியிடவில்லை.

நீட் தேர்வு குறித்து அரசியல் கட்சித் தலைவராக விஜய் தனது கருத்துகளைத் தெரிவித்துள்ளார். அவரது கருத்து, எங்கள் கட்சி வளர்ச்சிக்குப் பயன்படும். பா. ஜ. கவை எதிர்க்க வேண்டும் என்பதற்காகவே நீட் பரீட்சையை எதிர்க்கின்றனர்- என்றார். (எ)

## ரங்கசாமி ஆட்சிக்கு பா. ஜ. க. நெருக்கடி

புதுச்சேரி, ஜூலை 06

புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி மற்றும் பா. ஜ. க. அமைச்சர்களுக்கு எதிரான குற்றப் பத்திரிகையுடன் பா. ஜ. க. சட்டமன்ற உறுப்பினர்கள் புதுடில்லியில் முகாமிட்டுள்ளதால் புதுச்சேரி தேசிய ஜனநாயகக் கூட்டணியில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதனால் ரங்கசாமியின் ஆட்சிக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் எதற்கும் தயார் என்ற நிலையில் பா. ஜ. க. மேலிட முடிவை ரங்கசாமி எதிர்நோக்கியுள்ளார்.

புதுச்சேரியில் முதல்வர் ரங்கசாமி தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த ஆட்சியின் தொடக்கம் முதலே என். ஆர். காங்கிரஸ் மற்றும் பா. ஜ. க. இடையே மோதல் நீடித்து வருகிறது. (எ)

## "இடைத்தேர்தல் அல்ல அது எடைத்தேர்தல்"



வேலூர், ஜூலை 06

விக்கிரவாண்டியில் நடப்பது இடைத்தேர்தல் அல்ல, அது எடைத்தேர்தல் என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

வேலூரில் நடைபெற்ற மாநில அளவிலான இறுக்கிப் பந்து போட்டி நிறைவு விழாவில் பங்கேற்ற அன்புமணி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்களை வழங்கினார்.

இதன்பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அரசு மதுக்கடைகள் மூலம் 90 மில்லி மதுபானப் போத்தல்களை விற்கப்போவதாக அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் தி. மு. க. அரசுக்கு பொதுமக்கள், இளைஞர்கள், பெண்கள் குறித்தும் எந்தக் கவலையும் இல்லை என்று தெரிகிறது. தமிழக முன்னேற்றம் குறித்து அக்கறையில்லை. மது வைத் திணித்து நலத்திட்டங்களை கொண்டுவரவே நிர்வாகம் செய்கிறது- என்றார். (எ)

## "சமூக நீதிக்கு துரோகம் பாடம் புகட்ட வேண்டும்"

சென்னை, ஜூலை 06

சமூக நீதிக்குத் துரோகம் இழைப்பவர்களுக்கு பாடம் புகட்ட இந்தியா கூட்டணி வேட்பாளர் அன்னியூர் சிவாவுக்கு வாக்களியுங்கள் என்று விக்கிரவாண்டி தொகுதி வாக்காளர்களுக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எல்லா மக்களுக்கும் பொதுவான மக்கள் நலத்திட்டங்கள் தொடர உங்களின் ஆதரவை வேண்டி நிற்கிறோம்.

சமூக நீதிக்கு எதிரான பா. ஜ. க. கூட்டணியை தோற்கடிப்பது மூலமாக, சமூக நீதிக்குத் துரோகம் இழைப்பவர்களுக்கு தக்க பாடம் புகட்டுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்- என்றார். (எ)

## "தமிழகத்தில் புரட்சிகர திட்டங்கள்"

விழுப்புரம், ஜூலை 06

மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம், ஆண்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டம் உள்ளிட்ட புரட்சிகர திட்டங்களை அறிமுகம் செய்தவர் முதல்வர் மு. க. ஸ்டாலின் என தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை தெரிவித்தார்.

விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட ஆரியூர், வெங்கந்தூர் ஆகிய கிராமங்களில் தி. மு. க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## சகல மாநில முதல்வர்களையும் சந்திக்க சட்டத்தரணிகள் திட்டம்

சென்னை, ஜூலை 06

மத்திய அரசின் மூன்று சட்டங்களை எதிர்த்து போராடிவரும் சட்டத்தரணிகள் சங்க கூட்டமைப்பினர், அனைத்து மாநில முதல்வர்களையும் சந்தித்து முறையிடத் திட்டமிட்டுள்ளனர்.

இந்திய குற்றவியல் சட்டம், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய சாட்சிகள் சட்டம் ஆகிய சட்டங்களுக்கு மாற்றாக பாரதிய நியாய சன்ஹிதா, பாரதிய நாகரிக் சுரக்ஷா மற்றும் பாரதிய சாக்ஷ்யா அதினியம் ஆகியவற்றை மத்திய அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்த சட்டங்களை எதிர்த்து சட்டத்தரணிகள் சங்கங்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. இந்த நிலையில், தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில் சட்டத்தரணிகள் சங்கங்களின் கூட்டமைப்பினர் நேற்றுச் சந்தித்து குறித்த 3 சட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடினர். இதன் பின்னர் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டனர். (எ)

## விஜய்மீது விமர்சனம்

சென்னை, ஜூலை 06

'கோட்' திரைப்படத்தின் எதிர்ப்பை சமாளிக்கவே தமிழக வெற்றிக் கழகத் தலைவர் நடிகர் விஜய், நீட் பரீட்சை எதிர்ப்பை கையில் எடுத்திருப்பதாக தமிழக பா. ஜ. க. செய்தித் தொடர்பாளர் எஸ். பிரசாத் விமர்சித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய இழுவைமடிப் படகுகளால் இலங்கைக்கு ரூ.70 கோடி இழப்பு!

கொழும்பு, ஜூலை 06

**அத்துமீறிய இந்திய இழுவைமடி படகுகளினால் இலங்கைக்கு 700 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ள தாக மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது.**

இந்திய மீனவர்கள் வடக்குக் கடற்பரப்பில் மீண்டும் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்டு வரும் நிலையில், அத்துமீறிய மீன்பிடிக்காக கடந்த இரண்டு வாரங்களில் 50 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் படகு மோதி இலங்கைக் கடற் படைச் சிப்பாய் ஒருவர் உயிரி ழந்ததையடுத்து இந்த விடயங் கள் இரு நாடுகளுக்கும் இடை யில் பூதாகரமான விடயங்க ளாக மாற்றம் பெற்றுள்ள நிலையிலேயே, அத்துமீறிய மீன்பிடி தொடர்பான பாதிப் புகளை இந்திய அர சாங்கத் துக்கு இலங்கை தெளிவுபடுத்தி யுள்ளது.

இது தொடர்பான மேலும் சில விடயங்கள் இந்திய வெளி விவகார அமைச்சர் ஜெய்சங்கரின் கவனத்துக்குக் கொண்டு செல் லப்பட்டுள்ளதாகவும் மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது.

# பெருமளவிலான உலை எண்ணெய் திருடிய மோசடி கும்பல் சிக்கியது!

கொழும்பு, ஜூலை 06

கெரவலபிட்டிய - யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தில் மின் உற்பத்திக்காக பயன்படுத்தப்ப டும் உலை எண்ணெய் திருடப் பட்டு, அவற்றை வேறு நிறுவ னங்களுக்கு விற்கும் மோசடி யொன்று கண்டறியப்பட்டுள் ளது.

கொலன்னாவை பெற்றோ லிய சேமிப்பு முனையத்தின் புலனாய்வுப் பிரிவு நேற்று முன் தினம் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டது.

இந்தச் சுற்றிவளைப்பின் போது, திருடப்பட்ட 33,000 லீற்றர் உலை எண்ணெயுடன் பவுசர் வாகனம் மற்றும் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

இலங்கையில் நிர்மாணிக் கப்பட்ட இரண்டாவது பெரிய அனல் மின் நிலையமான கெர வலபிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையம் 300 மெகா வாட் கொள்ளளவை தேசிய அமைப்பிற்கு அனுப்புகிறது.

இந்த ஆலையில் மின் உற்பத் திக்கு பயன்படுத்தப்படும் உலை எண்ணெயை திருடும் மோசடிக் கும்பல் பற்றிய தகவல் வத்தளை, போபிட்டிய பிரதேசத்தில் இருந்து வெளியாகியிருந்தன.

யுகதனவி மின் உற்பத்தி நிலையத்திற்கு கொண்டு செல லப்படும் உலை எண்ணெய் வத் தளை, போபிட்டிய பிரதேசத் தில் உள்ள பவுசர் வாகன முற்றம் ஒன்றில் சாதுரியமான முறை யில் திருடப்பட்டு வேறு நிறு வனங்களுக்கு விற்பனை செய் யப்படுவதாகக் கூறப்பட்டது.

கிடைத்த தகவலுக்கு அமைய கொலன்னாவை களஞ்சிய நிலைய புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன் தினம் பிற்பகல் குறித்த இடத்தை சுற்றிவளைத்து அந்தக் கும்பலைக் கைது செய் தது. (அ)

# உள்ளூராட்சி மன்ற வாகனங்களை முன்னாள் தவிசாளர்களுக்கு வழங்குவது சட்டவிரோதம்!

## கபே அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 06

கிழக்கு, மத்திய மற்றும் தென் மாகாண ஆளுநர்கள் மூலமாக உள்ளூராட்சி மன்றங் களில் கடமையாற்றிய முன் னாள் நகர முதல்வர்கள் மற்றும் தவிசாளர்களுக்கு ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக இணைப் பாளர்கள் பதவியை வழங்கி அதனூடாக உள்ளூராட்சி மன் றங்களுக்கு சொந்தமான வாக னங்களை பாவிப்பதற்குரிய அனுமதி வழங்கப்பட்டிருப்ப தன் ஊடாக தேர்தல் சட்டத் தின் பிரகாரம் அரச சொத்து துஷ்பியோகக்கப்படுவது தொடர்பில் கபே தேர்தல் கண் காணிப்பு அமைப்பின் ஊடாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறான விடயங்கள் கண்டிக்கத்தக்கது என கெபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மகீன் தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள் ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல், வேட்பு மனு தாக்கல் செய்து தேர்தல் தினம் குறிப்பி டப்படாமல் வரையறை இன்றி ஒத்திவைக்கப்பட்டு இருக்கக் கூடிய சந்தர்ப்பத்தில் இவ்வா றான நியமனங்கள் வழங்கப் படுவது, அதேபோன்று அதன் ஊடாக அரச சொத்துக்கள் பாவிக்கப்படுவது தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறு கின்ற செயற்பாடாகும் என்ப தும் குறித்த கடிதத்தின் ஊடாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதேநேரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான வாகனங்கள் உள்ளூராட்சி மன்ற செயலாளர் வசமே காணப்படுவதனால், இவ்வாறு அரச சொத்து துஷ்பிர யோகத்துக்கு துணை போகக் கூடிய அரச உத்தியோகத்தர்க ளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பது தொடர்பிலும் குறித்த கடிதத் தில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது. (அ)

# கடந்த வாரத்தில் மட்டும் 846 டெங்கு நோயாளர்கள்!

கொழும்பு, ஜூலை 06

நாட்டில் டெங்கு நோயாளர் களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் கடந்த வாரத் தில் 846 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள தாக தேசிய டெங்கு கட்டுப் பாட்டுப் பிரிவு தெரிவித்துள் ளது.

அதன்படி, கொழும்பு மாவட் டத்திலிருந்து 269 டெங்கு நோயாளர்களும், கம்பஹா மாவட் டத்திலிருந்து 146 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கண்டி மாவட் டத்திலிருந்து 93 டெங்கு நோயா ளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த 6 மாத காலப்பகுதிக் குள் 28,239 டெங்கு நோயாளர் கள் அடையாளம் காணப்பட் டுள்ளதாக தேசிய டெங்கு கட் டுப்பாட்டுப் பிரிவு தெரிவித் துள்ளது. (அ)

# முடங்கிய திட்டங்கள் மீண்டும் உயிர் பெறும்!

கொழும்பு, ஜூலை 06

கடன் மறுசீரமைப்பு நடவ டிக்கைகளின் வெற்றியினால் கடந்த கால நெருக்கடியின் போது முடங்கிய திட்டங்கள் கடன் மறுசீரமைப்பினால் மீண் டும் உயிர்பெறும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத் தில் நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பிலேயே மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நாட்டை அபிவிருத்தி செய் வதற்காக அரசாங்கம் முன்னெ டுத்துள்ள வேலைத்திட்டத்தை சீர்குலைக்கும் வகையில் எதிர்க் கட்சியில் உள்ள சில தரப்பினர் வேலைகளில் ஈடுபட்டு வருகின் றனர்.

கடந்த கால நெருக்கடி நிலை யின் போது வலுசக்தித் துறை தொடர்பான பல திட்டங்கள் முடங்கின.

ஆனால் தற்போது இருதரப்பு கடன் வழங்குநர்களும் பல நாடுகளுடன் கடன் மறுசீரமைப்புக்கான உடன்பாடுகள் எட்டப்பட்டுள் ளதுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் கைச் சாத்திடப்பட்டுள்ளன-என்றார்.

# ஜனாதிபதியின் பாராளுமன்ற உரைக்கு ரூ. ஒரு கோடி செலவு!

கொழும்பு, ஜூலை 06

பாராளுமன்றம் கடந்த 02 ஆம் திகதி கூடியபோது சுமார் ஒரு கோடி ரூபா செலவிடப் பட்டுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

கடன் மறுசீரமைப்பு உடன் படிக்கைகள் தொடர்பில் ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையொன்றை நிகழ்த் துவதற்காக இந்த பாராளுமன்ற அமர்வு இடம்பெற்றது.

ஜனாதிபதியின் உரையின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவ ரின் கருத்துடன் பாராளுமன் றம் ஒத்திவைக்கப்பட்டது.

ஒன்றரை மணி நேரம் மாத்தி ரமே இந்த அமர்வு இடம்பெற் றது.

பாராளுமன்ற அமர்வு இடம் பெறும் சந்தர்ப்பத்தில் ஒரு நாளுக்குச் செலவிடப்படும் தொகை, இது போன்ற குறுகிய அமர்வுக்கு செலவிடப்பட்டுள் ளதாக பாராளுமன்றப் பேச்சா ளர் ஒருவர் தெரிவித்தார். (அ)

# இஸ்ரேலில் இலங்கையர் பொறுப்பற்ற நடத்தை!

## வேலை வாய்ப்புகள் நெருக்கடி நிலையில் என்கிறார் அமைச்சர் மனுஷ நாணயக்கார

கொழும்பு, ஜூலை 06


இஸ்ரேலுக்குச் சென்றுள்ள சில தொழிலாளர்களின் பொறுப் பற்ற நடத்தை காரணமாக இஸ் ரேலிய வேலைவாய்ப்புகள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. அதனால் இவர்களின் முறை யற்ற நடத்தைக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக் கப்படும் என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு அமைச் சர் மனுஷ நாணயக்காரவுக்கும் இலங்கைக்கான இஸ்ரேலிய தூ துவர் நவோர் கிலோனுக்கும் இடையிலான சந்திப்பொன்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கையர்க ளுக்கான இஸ்ரேலின் வேலை வாய்ப்புகள் மற்றும் தற்போது இஸ்ரேலில் பணிபுரியும் இலங் கையர்களின் நிலைமை குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் கருத்து தெரிவிக்கையில்-

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இஸ்ரேலில் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக இலங்கையிலிருந்து பயிற்சி யற்ற தொழிலாளர்கள் கூட கோரப்பட்டது. எனினும் இஸ் ரேலுக்குச் சென்ற சில இலங்



கையர்களின் நடத்தை மற்றும் முறையற்ற செயற்பாடுகள் கார ணமாக ஏற்பட்ட பிரச்னைக ளால் இஸ்ரேலில் உள்ள விவ சாய தொழில் முயற்சியாளர்கள் தற்போது இலங்கை தொழிலா ளர்களை வேலைக்கு அமர்த்து வதில் தயக்கம் காட்டுகின்றனர்.

இஸ்ரேலில் உள்ள சில இலங்கைத் தொழிலாளர்கள் இலங்கையில் போன்று போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கியதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கான தீர்வாக இஸ்ரேலிய விவசாய தொழில் முயற்சியாளர்களை இலங்கைக்கு வரவழைத்து பொருத்தமான நபர்களை அவர் களுடன் கலந்தாலோசிக்க ஒரு வேலைத்திட்டம் திட்டமிடப் பட்டுள்ளது.

அடிப்படை ஆவணங்களைக் கொண்டுள்ளவர்கள் இஸ்ரே லிய முதலீட்டாளர்களால் குலுக் கல் முறை மூலம் தேர்ந்தெடுக் கப்பட்ட தொழிலாளர்கள் பரி சீலிக்கப்படுவார்கள். விவசாயத் துறை அன்றி கட்டுமானம், தாதியர் பராமரிப்பாளர், ஹோட் டல் போன்றவற்றில் பல வேலை வாய்ப்புகள் உள்ளன.

இஸ்ரேலில் பாரிய அளவி லான கட்டுமானத் திட்டங்க ளுக்கு தொழிலாளர்கள் தேவைப் படுவதாகவும் தெரிவிக்கப்பட் டது.

தற்போது தெரிவு செய் யப்பட்ட தொழிலாளர்களுக்கு இத்திட்டங்களில் வாய்ப்பு வழங்குவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இதன்படி, இஸ்ரேலில் நெடுஞ்சாலைகள் மற்றும் ரயில் பாதைகள் போன்ற பாரிய நிர்மாண துறை களில் பணிபுரியும் வாய்ப்பு இலங்கையர்களுக்குக் கிடைக் கும்.

கடந்த காலங்களில் இஸ்ரே லுக்குச் சென்ற சில தொழிலா ளர்களின் பொறுப்பற்ற நடத்தை காரணமாக இஸ்ரே லிய தொழில் வாய்ப்புக்கள் தற்போது நெருக்கடிக்கு உள் ளாகியுள்ளது. அதனால் இஸ் ரேலில் பணிக்குச் சென்ற தொழிலாளர்களின் முறையற்ற நடத்தைக்கு எதிராகக் கடுமை யான நடவடிக்கை எடுக்கப்ப டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதற்றங்களுக்கு மத்தியில் நேற்று பதவியை பொறுப்பேற்ற தயாசிறி!

## சு.க. தலைமையகத்துக்கு கடும் பாதுகாப்பு

கொழும்பு, ஜுலை 06

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, கட்சித் தலைமையகத்திற்கு முன்பாக நேற்றுக் காலை கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.**

கொழும்பு - டாலி வீதியிலுள்ள சுதந்திர கட்சியின் தலைமைகத்திற்கு முன்பாக நேற்றுக் காலை அமைதியின்மை ஏற்பட்டது.

சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர கட்சித் தலைமையகத்திற்கு வருகை தந்ததை தொடர்ந்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை நேற்றுக் காலை தமது கட்சித் தலைமையகத்திற்கு வருமாறு அதன் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த பகுதியில் அமைதியின்மை ஏற்படக் கூடும் எனக் கருதி சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திற்கு அருகில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, கட்சித் தலைமையகத்திற்கு முன் பாகக் கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அத்தியாவசியப் பொருட்களை விரைவாக விடுவிக்க நடவடிக்கை



கொழும்பு, ஜுலை 06


சுங்கத் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கை நிறைவடைந்துள்ள நிலையில், தாமதமாகியுள்ள அத்தியாவசியப் பொருட்களை விடுவிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

சுங்க கட்டளைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொள்ளும் அதிகாரிகளின் தன்னிச்சையான தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து சுங்கத் தொழிற்சங்க உறுப்பினர்கள் வேலை நிறுத்தப் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

எனினும், இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டியவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் சுங்கத் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கையை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

தொழிற்சங்க நடவடிக்கை நிறைவடைந்துள்ள நிலையில், தாமதமாகியுள்ள அத்தியாவசியப் பொருட்களை விடுவிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். (அ)

# சிறுபோக நெற்செய்கை யானைகளால் நாசம்



கிளிநொச்சி, ஜுலை 06

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்துக்குட்பட்ட ஊரியான் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையை காட்டு யானைகள் தொடர்ச்சியாக அழித்து நாசம் செய்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஊரியன்குளத்தின் சிறு போக்க நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் குறித்த பயிர்செய்கைகளை தொடர்ச்சியாக காட்டு யானைகள் அழித்து வருகின்றன.

கடந்த புதன்கிழமை இரவு குறித்த பகுதிக்குள் புகுந்த காட்டு யானைகள் பெருமளவான விவசாய நிலங்களை அழித்து நாசம் செய்துள்ளன. (அ)

# பொருளாதாரத் தொடர்பு விரிவாக்கம் இலங்கை - ஜப்பான் இடையே பேச்சுகள்

கொழும்பு, ஜுலை 06

ஜப்பானுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், இலங்கையில் ஜப்பானின் புதிய முதலீடுகளை ஊக்குவிப்பது குறித்தும் பல்வேறு உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவினருடன் பரந்துபட்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளார்.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரின் அழைப்பின்பேரில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இம்மாதம் 1 - 7 ஆம் திகதி வரை ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். இவ்விஜயத்தின்போது ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொகோ கமிகவா, சிரேஷ்ட அமைச்சரவை செயலாளர் ஹயாஷி யொஷிமஸா, நீதிய மைச்சர் யுச்சி கொய்ஸூமி ஆகியோர் உள்ளடங்கலாக பல்வேறு உயர்மட்டத்தரப்பினரைச் சந்தித்து கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தார்.

அதன் நீட்சியாக இலங்கையில் முக்கிய முதலீடுகளை மேற்கொண்டிருக்கும் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவரகத்தின் (ஜெய்க்கா) சிரேஷ்ட நிர்வாகப் பிரிவு அதிகாரிகளுக்கும் அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது. இச்சந்திப்பின்போது கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களை உடனடியாக மீள ஆரம்பிப்பது குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதேவேளை நாட்டின் பொருளாதாரத்தை மீள வலுப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் தொடர்பில் ஜைக்கா அதிகாரிகள் பாராட்டு வெளியிட்டதாகவும், இலங்கையில் புதிய துறைகளில் முதலீடு செய்வது குறித்து கவனம்செலுத்துமாறு அவர்களிடம் தான் கேட்டுக்கொண்டதாகவும் அமைச்சர் அலி சப்ரி அவரது "எக்ஸ்" தளப்பதிவில் தெரிவித்துள்ளார். (அ)

# சிகிச்சை மறுக்கப்பட்டதால் உயிரிழந்த 2 மாதக் குழந்தை!

கொழும்பு, ஜுலை 06

மாத்தறை புதிய மாவட்ட வைத்தியசாலையில் 2 மாத குழந்தைக்கு சிகிச்சை வழங்க மறுத்ததையடுத்து, குழந்தையை வேறு ஒரு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாத்தறை கம்புருகமுவ பிரதேசத்தில் வசிக்கும் தம்பதியரின் 2 மாதம் 27 நாட்களேயான இரட்டைக் குழந்தைகளில் மூத்த குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இந்த குழந்தைக்கு புதன்கிழமை காலை பால் கொடுக்கப்பட்டபோது மூச்சுத்திணறல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெற்றோர் உடனடியாக குழந்தையை முச்சக்கர வண்டியில் மாத்தறை கொட்வில பிரதேசத்தில் அமைந்துள்ள புதிய மாவட்ட வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன்போது அவசர சிகிச்சைப் பிரிவு செயல்படவில்லை என்றும் அதனால் குழந்தையை சிகிச்சைக்கு ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் பாதுகாப்புப் பணியாளர்கள் கூறியதாகப் பெற்றோர் தெரிவித்தனர்.

பின்னர் குழந்தையை நோயாளர் காவு வண்டியில் வேறு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல அனுமதிக்குமாறு பெற்றோர் கேட்ட நிலையில், அதற்கும் வைத்தியசாலை பாதுகாப்புப் பணியாளர்கள் மறுத்துள்ளனர்.

பின்னர் சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் பயணித்து குழந்தையை மாத்தறை பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அதற்குள் குழந்தை இறந்துவிட்டதாகவும், 30 நிமிடங்களுக்கு முன்னதாக அழைத்து வந்திருந்தால் குழந்தையின் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம் என்றும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மாத்தறை பொது மயானத்தில் குழந்தையின் இறுதிக் கிரியைகள் இடம்பெற்றன. (அ)

# பொலிஸ் மோப்ப நாய் பிரிவுக்கு நெதர்லாந்திலிருந்து 35 நாய்கள்!



கொழும்பு, ஜுலை 06

பொலிஸ் மோப்ப நாய்கள் பிரிவுக்கு நெதர்லாந்திலிருந்து 35 நாய்கள் நேற்று வெள்ளிக் கிழமை கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்த நாய்கள் நெதர்லாந்திலிருந்து நேற்று அதிகாலை 02.05 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு இவை கொண்டுவரப்பட்டன.

இதனையடுத்து இந்த நாய்கள் கட்டுநாயக்க விமான நிலைய விலங்குகள் தனிமைப்படுத்தல் நிறுவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

நாய்களின் மொத்த மதிப்பு 50 கோடியே 80 இலட்சம் ரூபா ஆகும். இந்த நாய்களில் 21 பெண் நாய்களும் 14 ஆண் நாய்களும் உள்ளன.

இந்த நாய்களை ஏற்றுக்கொள்வதற்காக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர்நிஹால் தல்துவ கட்டுநாயக்க விமான நிலைய விலங்குகள் தனிமைப்படுத்தல் நிறுவனத்துக்கு வருகை தந்தார்.

இந்த நாய்கள் விமான நிலையத்தின் விமான சரக்கு முனையத்தில் இருந்து கட்டுநாயக்க விமான நிலைய விலங்குகள் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்குள்ள கால்நடை வைத்திய அதிகாரிகளினால் பரிசோதிக்கப்பட்ட பின்னர், நாய்களின் பயிற்சியாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# அக்கராயன் குளத்துக்கு அருகில் ஆணின் சடலம்!

முல்லைத்தீவு, ஜுலை 06

முல்லைத்தீவு ஐயங்கன் குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப் பகுதியை அண்மித்துள்ள பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி நீர்ப்பாசனக் குளமான அக்கராயன் குளத்தின் பின் பகுதியிலேயே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக ஐயங்கன் குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் விரல்களுக்கு மை பூசும் முறைமை இனி அவசியம் இல்லை!

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 06

**தேர்தல்களின்போது விரல்களுக்கு மை பூசும் முறைமை இனி அவசியமில்லை என ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் தலைவரும், பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**



தேர்தல் பணியில் 2010ஆம் ஆண்டு முதல் ஆட்கள் பதிவானது கணினி மயமாக்கப்பட்டு வருவதால், ஒருவர் இரு இடங்களில் வாக்களித்ததாகப் பதிவு செய்யப்பட்டால், அவர் அதிகாரிகளின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவார் எனவும் அவர் தெரிவித்தார்.

அதன்படி, விரல்களுக்கு மை பூச வேண்டிய அவசியம் இல்லை என்றும், அதற்கான செலவை குறைக்க வாய்ப்பு இருப்பதாகவும் அவர் வலியுறுத்தினார்.

ஒரு வாக்காளர் இரு இடங்களில் வாக்களிக்க வாய்ப்புள்ளது என்றதன் அடிப்படையில் விரல் மை பயன்படுத்தப்பட்டது என்று அவர் கூறினார்.


தனி நபர்களின் பதிவை கணினிமயமாக்கும் இந்த தொழில்நுட்பத்தின் மூலம் ஒரே மாதிரியான பெயர்கள் கண்டறியப்படும் என்றும், அடையாள அட்டை எண்கள் போன்றவை சரிபார்க்கப்படுவதால், இரு இடங்களில் தனிநபரின் வாக்குகள் பதிவாவதற்கு வாய்ப்பில்லை என அவர் கூறினார்.

எனவே, விரல்களுக்கு மை பூசுதல் தொடர்பான சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக ரோஹண ஹெட்டியாராச்சி மேலும் குறிப்பிட்டார். (அ)

# வரி செலுத்தும் குறுந்தகவல் கிடைத்தவர்கள் கவனத்துக்கு

கொழும்பு, ஜூலை 06

வரி செலுத்துமாறு கோரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து கடிதங்கள் அல்லது குறுஞ்செய்திகளைப் பெற்றவர்கள் தமது மாதாந்த வருமானம் 100,000 ரூபாவைத் தாண்டவில்லை என்றால் அதற்கு இணங்கத் தேவையில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெளிவுபடுத்தினார்.



வரி செலுத்துவோர் அடையாள எண்கள் (ரின்) உள்ள நபர்கள் அத்தகைய தகவல்தொடர்புகளைப் பெற்றதாக வெளியான தகவல்களுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதை வலியுறுத்தினார்.

மாதாந்த வருமானம் 100,000 ரூபாவைத் தாண்டாதவர்கள் வரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. இது குறித்து நபர்கள் அருகில் உள்ள உள்நாட்டு இறைவரி திணைக்கள அலுவலகத்துக்குத் தெரிவிக்கலாம் என அவர் கூறினார்.

இன்றுவரை தோராயமாக 2.3 மில்லியன் மக்கள் தங்கள் ரின் எண்களைப் பெற்றுள்ளதாகவும், ஜூன் மாதத்தில் மட்டும் 1.3 மில்லியன் பேருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# பேருவளை மீன்பிடி துறையில் விசேட சோதனை நடவடிக்கை

## போதைப்பொருள்களுடன் 10 பேர் கைது

கொழும்பு, ஜூலை 06

பேருவளை மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன்பிடித் துறைமுகத்தை அண்மித்த பகுதிகளில் களுத்துறை பிரதேச பொலிஸ் நிலையங்களின் தலைமையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, பேருவளை மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடித் துறைமுகத்தை அண்மித்த பகுதிகளிலுள்ள நபர்கள் சோதனைக்குட்ப டுத்தப்பட்டனர்.

இதன்போது, போதைப் பொருள் மற்றும் கேரளக் கஞ்சா வைத்திருந்த 10 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீன்பிடிக் கப்பல்களில் இடம்பெறும் கடத்தல்கள் மற்றும் குற்றச்செயல்களை தடுக்கும் நடவடிக்கையில் இந்த விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேர்தலுக்கு ஐக்கிய தேசிய கட்சியை தயார்ப்படுத்தும் பணிகள் மும்முரம்!

கொழும்பு, ஜூலை 06

ஜனாதிபதித் தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சியை தயார்ப்படுத்தும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

இதற்காக கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் தினமும் பல்வேறு சந்திப்புகளை அக்கட்சியின் மூத்த தலைவர்கள் நடத்தி வருகின்றனர்.

தேர்தல் பணிகளை வழிநடத்த ஜனாதிபதி செயலகத்தின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க தலைமையில் விசேட குழுவொன்றையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இந்த நிலையில் கொழும்பு மாவட்டத்தில் வாழும் மக்களின் முழுமையான வாக்குகளை கைப்பற்ற ஐ.தே.க வியூகம் வகுத்துள்ளது.

அதற்காக கொழும்பு மாவட்டம் முழுவதும் 1200 தேர்தல் காரியாலயங்களை அமைக்க ஐ.தே.க நடவடிக்கை எடுத்துள்ளது. எதிர்வரும் 10 நாட்களுக்குள் இந்த காரியாலயங்களை திறப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நாட்டை மீட்டெடுத்த தலைவர் "ரணில்" என்ற தொனிப்பொருளின் கீழ் வைக்கப்பட உள்ள பதாதைகள் ஊடாக மக்கள் எங்கு சென்றாலும், "ரணில்" என்ற பேச்சுகள் இடம்பெற வேண்டும் என்பதே ஐ.தே.கவின் நோக்கமாக உள்ளது.

அதன் காரணமாகவே "இதோ ஒரு நற்செய்தி" என்ற தொனிப்பொருளின் கீழ் பல்வேறு விளம்பரங்களும் அண்மைய நாட்களாக செய்யப்பட்டு வருகின்றன.

இந்தப் பணிகளை கட்சியின் மூத்த உறுப்பினர் ரவி கருணாநாயக்க செய்துவருவதாக தெரியவருகிறது. (அ)

# நானும் ஜனாதிபதிதான் என்று கூவிக்கொண்டு வருகின்றனர்

மட்டக்களப்பு, ஜூலை 06

நாடு பற்றி எரிந்தபோது ஓடி ஒளிந்தவர்கள் ஜனாதிபதித் தேர்தல் என்றவுடன் நானும் ஜனாதிபதிதான் என்று கூவிக் கொண்டு வருகின்றனர் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக 20 இலட்சம் பேருக்கு உறுமய காணி உரிமை உறுதிப் பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம் ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த வேலைத் திட்டத்துக்கு அமைவாக கிழக்கு மாகாணத்துக்கான நடமாடும் சேவை வியாழக்கிழமை மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

காணி சீர்திருத்த ஆணைக்குழுக்குச் சொந்தமான காணியில் குடியிருந்து இதுவரையில் காணி உறுதிகள் இல்லாதவர்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தின் மூன்றாவது நடமாடும் சேவை இதன்போது மட்டக்களப்பில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் கோரிக்கைக்கு அமைவாக காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமைக் காரியாலயம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட காரியாலயம் இணைந்து இந்த நடமாடும் சேவை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன் ஆரம்ப நிகழ்வு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கான பணிப்பாளர் என். விமல்ராஜ் தலைமையில் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வியாழேந்திரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் அதிகப்படியான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு எம்மிடம் உள்ளது. இந்த நாடு மிகப்பெரிய ஆபத்தான நிலையில் இருந்த வேலையில் நாம் மக்களை கைவிட்டு ஓடிவிட முடியாது. ஒரு குறுகிய காலத்துக்குள்ளே எமது நாடு பொருளாதார ரீதியில் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகின்றது. ஜனாதிபதித் தேர்தல் வர இருக்கின்றது. தினம் தினம் பல ஜனாதிபதி வேட்பாளர்கள் வந்து கொண்டே இருக்கின்றார்கள். நாடு பற்றி எரிந்தபோது ஓடி ஒளிந்தவர்கள் ஜனாதிபதித் தேர்தல் என்றவுடன் நானும் ஜனாதிபதிதான் என்று கூவிக்கொண்டு வருகின்றனர். இந்த நாடு பற்றி எரிந்தபோது, நாட்டு மக்கள் தவித்தபோது வீட்டு மூலைக்குள் ஒளிந்திருந்தவர்களும் இந்த நாடு இன்னும் நூறு வருடத்துக்கு மேல் எழமுடியாது என்று அறிக்கை விட்டவர்களுமே இவர்கள்தான்.

அப்போது நாட்டைப் பொறுப்பெடுத்த தலைவர் தான் ரணில் விக்கிரமசிங்க. அவர் நாட்டை விட்டு ஓடவில்லை. களத்தில் நின்று மக்களுக்காக இறுதிவரை போராடினார் என அவர் வியாழேந்திரன் மேலும் தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தயார்!

## தம்மிக்க பெரேரா அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 06

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு தயார் என தொழிலதிபர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு நான் தயாராக உள்ளேன். இலங்கையின் மிக பலம் வாய்ந்த கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே கட்சியின் வேட்பாளர் தொடர்பில் தீர்மானிக்கும். கட்சியின் தீர்மானத்திற்காக காத்திருக்கின்றேன்.

அத்துடன் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தேவையான பணிகளை முன்னதாகவே ஆரம்பித்துள்ளோம். ஜனாதிபதித் தேர்தலின் ஊடாக அதிகாரத்திற்காக போட்டியிடும் அனைத்து அரசியல்வாதிகளும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வது குறித்து இதுவரை வெளிப்படுத்தவில்லை. நான் ஏற்கனவே எனது கொள்கைகளைத் தயாரிக்க ஆரம்பித்துள்ளேன். இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேலும் அபிவிருத்தி செய்ய முடியும் என்பதை மக்களுக்கு விளக்குவதற்கு 60 நாட்களே தேவை.

டிபி கல்வித் திட்டத்தின் கீழ் தனது கொள்கைகள் மூலம் கல்வித்துறையின் வளர்ச்சியில் உள்ள பிரச்சினைகள் ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ளன.

நாட்டில் உள்ள அனைத்து 10,000 பாடசாலைகளுக்கும் சமமான கல்வியை வழங்குவதற்காக டிபி கல்வித் தளம் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளதால், இலங்கையில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் ஸ்மார்ட் வகுப்பறைகள் மாத்திரமே வழங்கப்பட வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகரையில் மினி சூறாவளி 12 வீடுகள் பலத்த சேதம்



வாகரை, ஜூலை 06

**மட்டக்களப்பு, வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிருமிச்சை பிரதேசத்தில் மழையுடனான மினி சூறாவளியால் பல மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் 12 வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டு பலத்த சேதமடைந்துள்ளன.**

வீடுகளில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக காயம் ஏதுவுமின்றி உயிர் தப்பினர் என்று வாகரை பிரதேச செயலாளர் ஏ. அருணன் தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையையடுத்து சம்பவதினமான வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் திடீரென மழை பெய்ததுடன் மினி சூறாவளி வீசியது. இதனால் பல மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் வீடுகளின் கூரை ஓடுகள், தகரங்கள் என்பன தூக்கி வீசப்பட்டன. ஓடுகள் வீடுகளுக்குள் வீழந்து உடைந்தன.

இந்த மினி சூறாவளி காற்றால் 12 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்ததுடன் எவருக்கும் காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.


# வாழைச்சேனை அந்நூரில் ஸ்மார்ட் வகுப்பறை திறப்பு

வாழைச்சேனை, ஜூலை 06

மட்டக்களப்பு, வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையில் ஸ்மார்ட் வகுப்பறை திறப்பு விழா புதன்கிழமை நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் ஏ. எம். எம். தாஹிரின் வழிகாட்டலில் பிரதி அதிபர் ஏ. ஆர். எம். நியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஸ்மார்ட் வகுப்பறையை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில், கௌரவ விருந்தினர்களாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். எஸ். அமீர் அலி, கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம். எல். . எம். ஹிஸ்புல்லாஹ், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எம். ஜவாத், பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள் எனப்பலரும்



கலந்து கொண்டனர்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமீர் அலியின் வேண்டுகோளுக்கமைய 11 இலட்சத்துக்கு 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஐந்து கணனிகள், ஒரு ஸ்மார்ட் திரை அடங்களான பொருட்களை எதிர்க்கட்சித் தலைவர் அந்நூர் பாடசாலைக்கு அன்பளிப்பு செய்து ஸ்மார்ட் வகுப்பறையை திறந்து வைத்தார்.

அத்துடன் சஜித் பிரேமதாஸ, பாடசாலை நூலகத்துக்கு நூல்களைப் பெற்றுக் கொள்ள ஒரு இலட்சம் ரூபாய் பணத்தையும் அன்பளிப்பு செய்ததுடன், மாணவர்களுக்கு ஆங்கில - தமிழ் அகராதிகளையும் வழங்கினார்.

(எ)

# கதிர்காம யாத்திரிகர்களுக்கு இலவச மருத்துவ முகாம்கள்

உகந்தை, ஜூலை 06

கதிர்காமத்துக்கான பாத யாத்திரிகர்கள் நலன் கருதி கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சு, கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் மற்றும் கல்முனை, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகள் இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாம்கள் உகந்தை மற்றும் குமண போன்ற இடங்களில் நடைபெற்றன.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" எனும் தொனிப் பொருளில் நடைபெற்ற இந்த இலவச மருத்துவ முகாமின்போது, 2000 பாதயாத்திரிகர்களின் தாக சாந்திக்கான குளிர்பானம் வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கமைவாக கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் மற்றும் சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் ஆகியோரின் அறிவுறுத்தல்களின் 1000 பேருக்கு நோய் எதிர்ப்பாற்றல் மருந்து, உடல் உபாதைகளை நீக்கக்கூடிய மருந்துகள் மற்றும் உடல் வலிகளைப் போக்கும் ஆயுர்வேத மருந்துகளும் வழங்கப்பட்டன.

இந்த இலவச மருத்துவ முகாமில் ஆயுர்வேத வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர் பங்கேற்று கதிர்காமம் பாதயாத்திரிகர்களுக்கான சிறந்த சேவைகளை வழங்கினர்.

(எ)

# நடமாடும் உணவு வண்டி தயாரித்து சம்மாந்துறையில் அறிமுகப்படுத்தல்

சம்மாந்துறை, ஜூலை 06

சமுர்த்தி திணைக்களத்தின் கீழ் வீடமைப்பு லொத்தர் வாழ்வாதார வேலைத்திட்டத்துக்காக உருவாக்கப்பட்ட கருத்திட்டத்தின் கீழ்

கல்லரிச்சல் கிராம உத்தியோகத்தர் பிரிவில் சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான நடமாடும் உணவு வண்டியை தயாரித்து அதனை அறிமுகப்படுத்தும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். முஹம்மது ஹனீபா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை



மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம். ஏ. சி. அகமட் சாபீர், சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ. எம். அஸ்லம், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம். பி. எம். ஹூசைன், வலய முகாமையாளர்கள், முன்னாள் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு தொடர்பில் சந்திப்பு



சாய்ந்தமருது, ஜூலை 06

இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு - 2024 தொடர்பில் இந்தியப் பிரதிநிதிகளுடன் விசேட சந்திப்பும் கலந்துரையாடலும் புதன்கிழமை சாய்ந்தமருதிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

கலாநிதி ஏ. எல். அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழக சட்டசபை முன்னாள் உறுப்பினர் கே. ஏ. எம் முஹம்மட் அபூபக்கர், முஸ்லிம் மீடியா போரத்தின் பொதுச் செயலாளர் சாதிக் சிஹான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு - 2024 தொடர்பில் ஆராயப்பட்டதுடன் பல்வேறு உதவிகளை இந்தியாவில் இருந்து பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக இந்தியப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். அத்துடன் மாநாடு தொடர்பில் இந்தியாவுக்கு வருகை தருமாறு இந்தியப் பிரதிநிதிகள் அழைப்பு விடுத்ததுடன் மாநாடு வெற்றி பெற பல்வேறு ஒத்துழைப்புகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் கூறினர்.

2024 உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டை முன்னிட்டு எமது மாநாட்டுக் குழுவின் அடுத்த கட்டம் பேராசிரியர்களுடனான சந்திப்புகளை மேற்கொள்ள உள்ளதாகவும் பின்னர் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டை மாவட்ட ரீதியாக ஒருங்கிணைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள உள்ளதாக கலாநிதி ஏ.எல். அன்சார் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

(எ)

# விசேட வேலைத்திட்டத்தின் கீழ் 4 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டல்

சம்மாந்துறை, ஜூலை 06

ரண்விமன, ஜெயவிமன தேசிய விசேட வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சம்மாந்துறை - 7, செந்நெல் கிராமம், மட்டக்களப்பு தரவை - 02 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 04 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். முஹம்மது ஹனீபா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன் கலந்து கொண்டு வீடுகளுக்கான அடிக்கல்லை நாட்டி[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் கட்சி முன்னிலை பிரதமராகிறார் ஸ்டார்மர்

## 14 ஆண்டுகளுக்குப் பிறகு பிரிட்டனில் ஆட்சி மாற்றம்



லண்டன், ஜூலை 06

**பிரிட்டன் பாராளுமன்றத் தேர்தல் முடிந்து வாக்குகள் எண்ணப்பட்டு வரும் நிலையில் தொழில் கட்சி வேட்பாளர் கீர் ஸ்டார்மர் முன்னிலை வகிக்கிறார். இதன் மூலம் கீர் ஸ்டார்மர் பிரிட்டனின் புதிய பிரதமராவது உறுதியாகியுள்ளது.**

பிரதமராக இருந்த கன்சர்வேடிவ் கட்சி வேட்பாளர் ரிஷி சுனக் படுமோசமாக பின்தங்கியுள்ளார். கீர் ஸ்டார்மர் போட்டியிட்ட லண்டன் தொகுதியில் வெற்றி பெற்ற நிலையில், “நீங்கள் வாக்களித்துவிட்டீர்கள் இனி நாங்கள் பணியாற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது” என வாக்காளர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலில், முக்கிய எதிர்க்கட்சியான தொழில் கட்சி 418 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்கும் என பெரும்பாலான கருத்துக்கணிப்புகள் கூறின. மொத்தம் உள்ள 650 இடங்களில் 326 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும் கட்சி ஆட்சியைப் பிடிக்கும். இந்த நிலையில், தற்போதைய நிலவரப்படி கீர் ஸ்டார்மர் தரப்பு 350 இற்கும் அதிக இடங்களிலும், ரிஷி சுனக் தரப்பு வெறும் 82 இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றது. இதன் மூலம் கீர் ஸ்டார்மர் பிரிட்டனின் புதிய பிரதமராவது உறுதியாகியுள்ளது. அத்தோடு, 14 ஆண்டுகளுக்குப் பிறகு தொழில் கட்சி ஆட்சியைப் பிடித்துள்ளது.

# தேர்தல் தோல்விக்கு பொறுப்பேற்கிறேன்

## ரிஷி சுனக் தெரிவிப்பு

லண்டன், ஜூலை 06

பிரிட்டன் பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியைத் தழுவியுள்ளது கன்சர்வேட்டிவ் கட்சி. இந்த நிலையில், இந்தத் தோல்விக்கு முழுப் பொறுப்பேற்கிறேன் என்று அந்தக் கட்சியைச் சேர்ந்தவரும், பிரதமருமான ரிஷி சுனக் தெரிவித்தார்.

தேர்தலில் தொழில் கட்சி வெற்றி பெற்றுள்ளது. நான் கீர் ஸ்டார்மரை தொடர்பு கொண்டு பேசினேன். அவருக்கு எனது வாழ்த்தினை தெரிவித்தேன். இன்று ஆட்சி அதிகாரம் அமைதியான முறையில் கைமாறியுள்ளது. நம் நாட்டின் எதிர்காலம் சார்ந்து நம் அனைவருக்கும் நம்பிக்கை அளிக்கும் வகையில் ஆட்சி அமைய வேண்டும். இந்தத் தோல்விக்கு நான் முழுப் பொறுப்பேற்கிறேன். என்னை மன்னிக்கவும் எனத் தெரிவித்தார். ரிஷி சுனக் வடக்கு இங்கிலாந்தில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



பிரிட்டனில் மொத்தம் உள்ள 650 தொகுதிகளில் 326 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும் கட்சி ஆட்சியைப் பிடிக்கும். அந்த வகையில் தொழில் கட்சி ஆட்சி அமைக்க உள்ளது. இதன்மூலம் 14 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் கட்சி ஆட்சியைப் பிடித்துள்ளது. கடந்த 2005 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் தொழில் கட்சி வெற்றி பெற்றது. அப்போது கார்டன் பிரவுண் பிரதமராக இருந்தார். 2010 ஆம் ஆண்டு தேர்தலில் அந்தக் கட்சி தோல்வியடைந்தது. அதன் பின்னர் தற்போது வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் 61 வயதான கீர் ஸ்டார்மர், பிரிட்டன் பிரதமராகப் பதவியேற்கிறார். (எ)

# ஜனநாயக கட்சியின் வேட்பாளர் நான்தான்

## ஜோ பைடன் திட்டவட்டம்



வாஷிங்டன், ஜூலை 06

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சியின் வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் தொடர்வதாக அவரது சார்பில் அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதனை பைடன் தரப்பு பிரசாரக் குழு தெரிவித்துள்ளது.

“உங்கள் எல்லோருக்கும் ஒரு விடயத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஜனநாயக கட்சியின் வேட்பாளர் நான் தான். நான் போட்டியில் நீடிக்கிறேன். யாரும் என்னை விலகும்படி சொல்லவில்லை. நானும் இதிலிருந்து வெளியேறவில்லை. இறுதிவரை போட்டியில் இருப்பேன். இந்தத் தேர்தலில் நாம் தான் வெற்றி பெறப்போகிறோம். நவம்பரில் ட்ரம்பை வீழ்த்த எனக்கும், கமலா ஹரீஸூக்கும் உதவுங்கள்” என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)


# எல்லைப் பிரச்னையைத் தீர்க்க இரட்டிப்பு முயற்சிக்கு ஒப்புதல்

## சீன அமைச்சரை சந்தித்த ஜெய்சங்கர் தகவல்

அஸ்தானா, ஜூலை 06

எல்லைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை இரட்டிப்பாக்க சீனா ஒப்புக் கொண்டிருப்பதாக அந்த நாட்டு வெளியுறவு அமைச்சருடனான சந்திப்புக்குப் பிறகு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட 10 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு கஜகஸ்தான் நாட்டின் அஸ்தானா நகரில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்பதற்காக சென்றுள்ள ஜெய்சங்கர், மாநாட்டின் இடையே சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யி-யை வியாழக்கிழமை சந்தித்துப் பேசினார். பின்னர் இந்த சந்திப்பு குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,



இந்தியா - சீனா இடையே எல்லைப் பகுதிகளில் எஞ்சியுள்ள பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு காண்பது குறித்து இந்தச் சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டது. அந்த நோக்கத்துக்காக இராஜதந்திர மற்றும் இராணுவ வழிகள் மூலம் முயற்சிகளை இரட்டிப்பாக்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். (எ)



# அசாம், மணிப்பூரில் கனமழை!

## வெள்ளத்தில் சிக்கி 50 பேர் பலி

புதுடில்லி, ஜூலை 06

தொடர் கனமழை காரணமாக அசாம் மற்றும் மணிப்பூர் மாநிலங்களின் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இரு மாநிலங்களிலும் மொத்தம் 50 பேர் உயிரிழந்தனர். அசாமில் 46 இறப்புகளும், மணிப்பூரில் நான்கு இறப்புகளும் பதிவாகியுள்ளன.

வடகிழக்கு மாநிலங்களில் கனமழை தொடர்ந்து பெய்து வருவதால், மணிப்பூர் மற்றும் அசாம் மாநிலங்களில் அபாயகரமான நிலை நீடித்து வருகிறது. (எ)

# இஸ்ரேல்மீது தாக்குதல்!

டெல் அவிவ், ஜூலை 06

இஸ்ரேலிலுள்ள இராணுவ இலக்குகளை நோக்கி 200 இற்கும் மேற்பட்ட ரொக்கெட்களை ஹிஸ்புல்லா அமைப்பு வீசியது. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஹிஸ்புல்லா தளபதி முகமது நிமா நாசர் இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்டு ஒரு நாள் கழித்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)



# சமூக தளங்களுக்கு ஆறு நாட்கள் தடை

லாகூர், ஜூலை 06

பாகிஸ்தான், பஞ்சாப் மாகாணத்தில் அனைத்து சமூக வலைத்தள சேவையும் ஆறு நாட்களுக்குத் தடை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 13 முதல் 18 ஆம் திகதி வரை அங்கு இந்தத் தடை அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறையைத் தடுக்கும் நோக்கில் தடை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என மாகாண அரசு தெரிவித்துள்ளது. இதன் மூலம் வெறுப்பு பேச்சு மற்றும் தவறான கருத்து, தகவல் பகிரப்படுவதைத் தடுக்கலாம் என அந்த அரசு கருதுகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் ஒருவருக்கு போலி முகநூலில் அவதூறு ஏற்படுத்திய கிராம அலுவலர்!

## கைதாகிப் பிணையில் விடுதலை

வவுனியா, ஜூலை 06

**வவுனியாவில் ஆசிரியர் ஒருவருக்கு போலி முகநூலில் அவதூறை ஏற்படுத்தி தொலைபேசியில் மிரட்டல் விடுத்த கிராம அலுவலர் ஒருவர் கைதாகி நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.**

வவுனியா வடக்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த தரணிக்குளம் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் கிராம அலுவலரின் ஆதரவுடன் இடம்பெற்ற காடழிப்பு தொடர்பில் கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக வெளிப்படுத்தியமையால் குறித்த ஆசிரியருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் போலி முகநூலில் அவ் ஆசிரியர் தொடர்பாக தவறான தகவல்கள் பகிரப்பட்டதுடன், தொலைபேசியிலும் ஆசிரியருக்கு அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்ட குறித்த ஆசிரியர் ஜனாதிபதி செயலகம், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, ஒம்புட்ஸ்மன், மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர் என பலரிடமும் முறையிட்டதுடன், குறித்த சம்பவம் தொடர்பில் கணினி பயன்பாட்டுக் கட்டுப்பாட்டு பிரிவு பொலிஸாருக்கும் முறைபாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்த பொலிஸார் குறித்த முகநூல் கிராம அலுவலருடையது என்பதை கண்டறிந்ததுடன் அதனை முடக்கியிருந்தனர். இந்நிலையில் தொலைபேசியில் அச்சுறுத்தியமை மற்றும் போலி முகநூலில் அவதூறை ஏற்படுத்தியமை தொடர்பில் வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கிராம அலுவலருக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று முன் தினம் வழக்கு விசாரணை இடம்பெற்றபோது மன்றின் கட்டளைக்கு அமைய நீதிமன்றச் சிறையில் அடைக்கப்பட்ட கிராம அலுவலர் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அத்துடன் வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(அ)

# விசேட சுற்றிவளைப்பின்போது கிளிநொச்சியில் 10 பேர் கைது!

கிளிநொச்சி, ஜூலை 06

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவில் உள்ள கல்லாறு பகுதியில் விசேட சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது.

இதில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார், இராணுவத்தினர் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து இதனை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் ஐஸ் போதைப்பொருள், மோட்டார் சைக்கிள் உள்ளிட்டவை மீட்கப்பட்டன.

இவர்கள் அனைவரையும் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(அ)

# மின்னல் தாக்கி விவசாயி பலி!

கொழும்பு, ஜூலை 06

மொனராகலை-எத்திமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விவசாயி ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வயலொன்றில் வேலை செய்து கொண்டிருந்த 50 வயதுடைய விவசாயியே மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இவர் மேலும் மூன்று நபர்களுடன் இணைந்து வயலில் வேலை செய்து கொண்டிருக்கும்போது கடும் மழை காரணமாக அருகில் இருந்த மரமொன்றுக்கு அடியில் நின்றுகொண்டிருந்தபோது மின்னல் தாக்கி காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து காயமடைந்தவர் எத்திமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

# பண மோசடி சந்தேகநபர்கள் 18ஆம் திகதி வரை மறியலில்

கொழும்பு, ஜூலை 06

இணையத்தளம் ஊடாக சட்டவிரோதமாக பணமோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 37 பேரும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதம நீதவான் திலின கமகே முன்னிலையில் சந்தேகநபர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இலங்கையிலிருந்து இணையத்தளம் ஊடாக வியாபார ரீதியில் மோசடியில் ஈடுபட்ட 22 வயதான இலங்கைப் பிரஜையும் சீன, பங்களாதேஷ் மற்றும் நேபாள பிரஜைகளும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு பணத்தை இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் அந்தப் பணத்தை இலங்கை ரூபாவில் நீதிமன்றப் பொறுப்பில் வைக்குமாறும் அறிவித்துள்ளார்.

(அ)

# அச்சுவேலியில் பக்திபூர்வமாக இடம்பெற்ற அர்ச்சனைப் பூக்கள் இசைப்பேழை வெளியீடு





யாழ்ப்பாணம், ஜூலை 06

அச்சுவேலி காட்டுமலை கந்தசுவாமி மீது ரஜரட்டை பல்கலைக்கழக மாணவி பா. அர்ச்சனாவால் எழுதிப் பாடப்பட்ட அர்ச்சனைப் பூக்கள் என்ற இசைப்பேழை வெளியீட்டு விழா கடந்த புதன்கிழமை இரவு 9.15 மணிக்கு காட்டுமலை கந்தசுவாமி ஆலய முன்றிலில் சப்பரத் திருவிழா நிறைவில் நடைபெற்றது.

மன்னார் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞான. ஆதவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசனும் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் அதிபர் ச. சத்தியவரதன், இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் தயாளினி குமாரசாமி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வரவேற்புரையை அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் கு.ரவிச்சந்திரன் ஆற்றினார். ஆசியுரையை ஆலயப் பிரதம குரு சீ.சி.சி. சிவானந்தம் ஐயர் வழங்கினார். யாழ். பல்கலைக்கழக பண்டிதர் கற்கை வருகை விரிவுரையாளர் பண்டிதை தவபாலன் சியாமினி, சைவப்புலவர் கி. வரதராசா ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.

அச்சுவேலி நிதர்சன் பாடல்களுக்கு இசை வழங்கி உள்ளார்.

இசைப் பேழையை ஆலய பிரதம குரு சீ.சி.சி. சிவானந்தம் ஐயர் வெளியிட்டு வைக்க செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் பெற்றுக் கொண்டார்.

1929 இல் தமிழ் வழிபாட்டிற்கு முதன்மை கொடுத்து வேலை மூலவராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலயத்தில் தற்போது வெளியிடப்பட்ட இசைப்பேழை 10 ஆவது இசைப் பேழை என்று தெரிவிக்கப்பட்டது.

(அ)

# சந்தேகத்துக்கிடமான முறையில் விமான நிலையத்தில் நின்ற கார்!

கொழும்பு, ஜூலை 06

உரிமையாளர் இன்றி நீண்ட நாட்களாக கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரை எல்பிட்டிய பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்த காரானது கடந்த மே மாதம் 29 ஆம் திகதியிலிருந்து கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த கார் அம்பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு சொந்தமானது என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இந்த கார் பலப்பிட்டி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஒன்றுடன் தொடர்புடையது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# உலகத் தலைவர்கள் ராஜதந்திர மட்டங்களில் நன்கு அறியப்பட்ட தலைவர் இரா.சம்பந்தன்

## தமிழர் சமூக ஜனநாயக கட்சி தலைவர் சுகு இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 06

யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் உலகத் தலைவர்கள் ராஜதந்திர மட்டங்களில் நன்கு அறியப்பட்ட தலைவர் இரா. சம்பந்தன்.

-இவ்வாறு

தெரிவித்துள்ளார் தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் தலைவர் சுகு சிறிதரன்.

சம்பந்தனின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இராசவரோதயம் சம்பந்தன் இலங்கையின் அனைத்து சமூக அரசியல் தலைவர்களுடனும் பரவலாக நல்லுறவைப் கொண்டிருந்தவர்.

யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் உலகத் தலைவர்கள் ராஜதந்திர மட்டங்களில் நன்கு அறியப்பட்ட தலைவர்.

தமிழ் மக்களின் ஆதரவும் பரவலாக காணப்பட்டது.

செல்வா , அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்கள் உலகளாவிய அளவில் அறியப்பட்டதை விட சம்பந்தர் அவரது காலத்தில் அறியப்பட்டார். இலங்கையின் வேறெந்த தலைவரும் அவ்வாறு அறியப்பட்டிருக்கவில்லை.

மிதவாத தலைவர் என்ற விம்பம் பிரபாகரனை விஞ்சிய உலகளாவிய முக்கியத்துவத்தை அவருக்களித்தது.

யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் இலங்கையின் இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு சகல இன சமூகங்களுடைய சமாதானத்தை கொண்டு வருவதற்கான பிரம்மாண்டமான வாய்ப்புகள் சம்பந்தன் முன்னால் இருந்தன .

இலங்கையின் சகல சமூகங்களின் ஒத்துழைப்புடன் சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் சாதிக்கும் வாய்ப்புகள் இருந்தன. சம்பந்தன் இதனை முன்நின்று சாதித்திருக்க முடியும். சாதித்திருக்க வேண்டும்.

ஆனால் துருதிஷ்டவசமாக அது நிகழவில்லை.

அரசியல் தீண்டாமை கட்சி கதிரை கோஷ்டி சண்டைகளால் இழக்கப்பட்ட வீணடிக்கப்பட்ட காலம்.

இனி வரும் காலத்திலாவது இந்த இழந்த சந்தர்ப்பத்தை வரலாற்றுத் தவறை உணர்ந்து தீண்டாமை பாராட்டாத வேற்றுமையில் ஒற்றுமை கண்டு செயல்படும் காலம் வருமா ?

அன்னாரின் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கல்கள்.அஞ்சலிகள்-என்று குறிப்பிட்டுள்ளார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதான...

காணப்படும் பிரதான வீதியின் மேல்படை நேற்று அகழப்பட்டது. அத்துடன், தோண்டப்பட்ட பகுதியை மழை பாதிக்காதிருக்க கொட்டகையும் அமைக்கப்பட்டது. இந்த அகழ்வுப் பணியை 10 நாட்கள் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னதாக, இரு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் 40 எலும்புக்கூடுகள், துப்பாக்கிச்சன்னங்கள், விடுதலைப் புலிகளின் போராளிகளுக்கு சொந்தமான இலக்கத்தகடுகள் மற்றும் உடைகள் மீட்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மருத்துவர்கள்...

இதேநேரம், மருத்துவர்களுக்கும் மருத்துவமனை நிர்வாகத்துக்கும் இடையே நிலவும் பிரச்னைக்கு தீர்வு காணும் நோக்கில் நாளை மறுதினம் திங்கட்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய பணிமனையில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேசமயம், சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையை நம்பியுள்ள பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து மருத்துவர்களின் போராட்டத்தை முடிவுறுத்தி தமக்கான சேவையை ஆரம்பிக்குமாறு கோரி நேற்று மருத்துவமனை முன்பாக போராட்டம் நடத்தியிருந்தனர்.

இதன்போது, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைந்து செல்லுமாறு அங்கு வந்த பொலிஸார் தெரிவித்தனர். அங்கிருந்து கலைந்து செல்ல மறுத்த சாவகச்சேரி பிரதேச நகர சபையின் முன்னாள் உறுப்பினர் கிஷோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில், பொதுமக்கள் அதிகளவில் அளித்த முறைப்பாட்டை அடுத்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தலைமையிலான குழு நேற்று மருத்துவமனைக்கு சென்று போராட்டம் நடத்திய மக்களையும் மருத்துவமனை நிர்வாகத்தையும் சந்தித்துப் பேசியது.

சாவகச்சேரி மருத்துவமனையின் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த நோயாளர்கள் அங்கிருந்து வெளியேறியமையையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரும் அவதானித்திருந்தனர்.

இதேநேரம், சாவகச்சேரி மருத்துவமனை விவகாரத்துக்கு தீர்வு காணும் நோக்கில் நாளை மறுநாள் திங்கட்கிழமை வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகர், மருத்துவமனையின் அபிவிருத்திக் குழு ஆகியவற்றுடன் கலந்துரையாடலை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி மருத்துவமனை அத்தியட்சகரை மாற்றம் செய்யுமாறு வலியுறுத்தி மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்திருந்தனர். மருத்துவ அத்தியட்சகர் மனிதாபிமானமின்றியும் தான்தோன்றித்தனமாகவும் நடக்கிறார் என்றும் வாய்மொழி துன்புறுத்தல்களை மேற்கொள்கிறார் என்றும் அவர் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

எனினும், சுகாதார ஊழியர்கள் மருத்துவர்களின் கருத்துக்கு எதிரான கருத்துகளை தெரிவித்தனர். மருத்துவமனையை சிறந்த சேவை வழங்கும் நிறுவனமாக மாற்றுவதற்கு பொறுப்பு மருத்துவ அதிகாரி முயற்சிக்கும்போது, அதற்கு மருத்துவர்கள் ஒத்துழைக்க மறுத்து வருகின்றனர் என்றும் அவர்கள் கூறினர். (ஐ)

## யாழ்...

பொலிஸ் அத்தியட்சகர்கள், யாழ்ப்பாணம் பிராந்திய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதுவரை யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய ஜகத் விசாந்த பிரதி பொலிஸ் மா அதிபராக பதவி உயர்வு பெற்று சென்றமையால் அவரின் பதவிக்கு சூரிய பண்டார நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## மீனவர்

பேச்சுகளை முன்னெடுக்கவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில், பங்கேற்றிருந்த கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள் " அண்மையில் இலங்கைக்கு வந்த இந்திய வெளியுறவு அமைச்சரை சந்தித்தபோது கூட தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எமது பிரச்னைகள் குறித்து பேசவில்லை", என்று தெரிவித்தனர்.

இதன்போது, இந்தக் கூட்டத்துக்கு இணைத்தலைமை வகித்த அமைச்சர் கருத்து வெளியிடுகையில், தனக்கும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பில் கடற்றொழிலாளர் விவகாரம் விரிவாக பேசப்பட்டதாகக் கூறிய அவர், இந்திய வெளிவிவகார அமைச்சரின் அழைப்பு குறித்தும் தெரிவித்தார். (ஐ)

## ஒற்றையாட்சி

வைத்துக்கொண்டு பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி குறித்த உண்மைக்கு புறம்பான பிரசாரங்களை இந்திய மேற்குத்தரப்புக்கள் தெரிவித்து வருகிறார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை எந்த வகையிலும் நம்பிக்கை தரவில்லை, நாட்டை பொருளாதார வளர்ச்சியில் முன்னோக்கி கொண்டு செல்வதாக கதைகளை சொல்லி மக்களை ஏமாற்றி மீண்டும் ஒரு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறார்.

இந்த நாட்டில் 75 வருடமாக காணப்படும் இனப்பிரச்னை தீர்க்கப்பட வேண்டும். மேலும் ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலை முடக்கும் செயற்பாடுகளை ரணில் முன்னெடுத்து வருகிறார்- என்றார். (அ)

## கிணற்றில்...

குறித்த பெண்ணைக் காணவில்லை என்று கடந்த முதலாம் திகதி மூதூர் பொலிஸ் நிலையத்தில் அவரின் பெற்றோர் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில், அவரின் காதலன் என்று கூறப்படும் மூதூர் - கிளிவெட்டியை சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், இருவரும் கடந்த மே மாதம் மட்டக்களப்புக்கு சென்று தனியாக வசித்தனர் என்றும், கடந்த மே 31ஆம் திகதி சொந்த இடத்துக்கு திரும்பியிருந்தனர். இதைத் தொடர்ந்து, யுவதியுடன் அந்த இளைஞர் தொடர்பை துண்டித்துள்ளார். இதைத் தொடர்ந்து, யுவதி காணாமல் போயிருந்தார். அந்த இளைஞரும் தலைமறைவாகியிருந்தார்.

இந்த நிலையிலேயே, பொலிஸார் முன்னெடுத்த விசாரணையில் காணாமல்போன யுவதி கொல்லப்பட்டு பாழடைந்த கிணற்றுக்குள் புதைக்கப்பட்டதாக தெரியவந்தது. இதைத் தொடர்ந்தே நேற்று அந்தக் கிணறு தோண்டப்பட்டு சடலம் மீட்கப்பட்டது.

மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஜப்பானின் உதவிகள் கிடைத்தால் நிறுத்தப்பட்ட திட்டங்கள் ஆரம்பமாகும்!

## அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, ஜூலை 06

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்ததை அடுத்து சர்வதேச நாடுகளோ, அமைப்புகளோ நிதியுதவி வழங்காதததால் உள்நாட்டில் நெடுஞ்சாலை நிர்மாணம் உள்ளிட்ட அபிவிருத்தி செயல் திட்டங்களை முன்னெடுக்க இயலவில்லை எனச் சுட்டிக்காட்டியிருக்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன, ஜப்பானின் உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்ட திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைவாக இலங்கையால் முன்னெடுக்கப்பட்டுவரும் கடன் மறுசீரமைப்பு செயன்முறை தொடர்பில் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரணில் தலைமையில் சர்வதேச நாணய நிதியத்தை நாடி, இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதியுதவிச் செயல்திட்டம் தொடர்பில் இறுதிக் கட்ட இணக்கப்பாட்டை எட்டியதன் ஊடாக, தற்போது நாடு மீண்டும் மூச்சுவிட ஆரம்பித்திருக்கின்றது - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## பிரிட்டன்

நடைபெற்றது. இதன் முடிவுகள் நேற்று முதல் வெளியாகின. இந்தத் தேர்தலில் தொழில்கட்சி பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்கவுள்ளது.

இதில், தொழில் கட்சியின் சார்பில் உமா குமரன் ஸ்ராட்போர்ட் தொகுதியில் போட்டியிட்டிருந்தார். 2010ஆம் ஆண்டு முதல் தொழிலாளர் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் உமா குமரனின் பெற்றோர் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்களாவர். அவர்கள் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களாவர்.

இதேநேரம், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை மூலம் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதன் மூலம் மாத்திரமே நீதியை நிலை நாட்டமுடியும் என்றும் இதற்கான நடவடிக்கைகளை தான் மேற்கொள்வேன் என்றும் உமா குமரன் தனது பிரசாரத்தில் மேற்கொண்டிருந் தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை நடந்த பிரிட்டன் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவர்களில் 8 பேர் தமிழர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கடன்...

வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில்,

மிகவும் கடினமான காலகட்டத்திலேயே என்னால் ஆட்சியமைக்க நேரிட்டது. ஆட்சியைப் பொறுப்பேற்க தலைவர்கள் எவரும் அப்போது முன்வரவில்லை. ஆனாலும் நான் ஏற்றுக்கொண்டேன். பல கட்சிகளை ஒன்றிணைத்து ஆட்சியமைத்தேன். தற்போது மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்க ஆரம்பித்திருக்கிறோம்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோது மக்கள் நம்பிக்கை இழந்திருந்தனர். இன்று இந்தப் பகுதி எம். பிக்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். தமது வீடுகள் தீயிடப்பட்டதை மறந்துவிட்டு மக்களுக்கு நன்மை செய்ய முன்வந்திருக்கிறார்கள்.

இன்று நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டுள்ளது. கடனை திருப்பிச் செலுத்த எமக்கு 4 வருட கால அவகாசம் உள்ளது. மேலும், சுமார் 6 வருடங்கள் மிதமான சுமையுடன் கடனை செலுத்தும் வாய்ப்பும் கிடைக்கும். செலுத்தவேண்டிய வட்டியில் ஒரு தொகை வெட்டிவிடப்பட்டுள்ளது. அதனால் 500 கோடி டொலர்கள் நாட்டுக்கு எஞ்சும்.

தற்போது தனியார் ஒப்பந்ததாரர்களுடன் பேச்சு நடத்தி வருகிறோம். அதன்படி, சுமார் 300 கோடி டொலர்கள் குறைவடையும். எனவே நாம் செலுத்தவேண்டிய பணத்தில் இருந்து மொத்தம் 800 கோடி டொலர்கள் வெட்டிவிடப்படும். மேலும், தளர்வான நிபந்தனைகளின் கீழ் 200 கோடி டொலர் கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் சீனா, இந்தியாவின் உதவித் தொகைகள் அதற் குள் உள்ளடங்காது. இதன் மூலம் கடந்த இரண்டு வருடங்களில் 800 கோடி டொலர்களை சேமித்துள்ளோம் - என்றார். (ஐ)

## விபத்தில்...

பிற்பகல் பதுளை - சொரனா தோட்டை வீதியில் வெலிஹித்தை பகுதியில் இந்த விபத்து இடம்பெற் றுள்ளது.

மொனராகலையில் இருந்து பதுளை வந்த லொறியே சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து நடுவீதியில் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானது. இதில், லொறியில் பயணித்த 38, 40, 35, 31 வயதுடைய நால்வரே உயிரிழந்தனர்.

காயமடைந்தவர்கள் பதுளை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

## இரா.சம்பந்தனின்...

கடந்த ஞாயிற்றுக்கிழமை கால மான இரா. சம்பந்தனின் பூதவுடல் நேற்று முன்தினம் சிறப்பு விமானம் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுசெல் லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. நேற்றுக் காலை சிறப்பு விமானம் மூலம் திருகோண மலை விமானப் படைத்தளத்தை வந்தடைந்தது.

பின்னர், அங்கிருந்து வாகனத்தின் மூலமாக அவரின் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு, அஞ்சலிக்காக வைக்கப்பட்ட சம்பந்தனின் பூதவுடலுக்கு கிழக்கு மாகாண ஆளு நர் செந்தில் தொண்டமான், மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பொது மக்கள் எனப் பலர் அஞ்சலி செலுத்தினர். (ஐ-04)

## ஜனாதிபதி...

எதிர்பார்த்துள்ளதாகவும் அது கூறியுள்ளது.

மதவாச்சியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக ஒரு இடத்தில் 5 ஆண்டுகள் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போன்று 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் மற்றுமொரு இடத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் தற்போது குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை அமைச்சரவையில் இது தொடர்பான யோசனை ஒன்றை ஜனாதிபதி முன்வைத்துள்ளார். விரைவில் இந்த விடயம் தொடர்பான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வருவதற்கும் எதிர்பார்த்துள்ளோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஜனாதிபதி தேர்தலை தடுக்கக் கோரும் மனு திங்களன்று விசாரணைக்கு வரும்!

## நான்கு நீதியரசர்கள் கொண்ட ஆயத்தின் முன்

கொழும்பு, ஜூலை 06

**ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் முடிவடையும் திகதி தொடர்பான விளக்கத்தை நீதிமன்றம் வழங்கும் வரை திட்டமிடப்பட்ட ஜனாதிபதித் தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு நடத்துவதை தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவை கோரி தொழிலதிபர் சி.டி.லெனவா தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளது.**

நீதியரசர்கள் விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ, பிரீத்தி பத்மன் சூரசேன மற்றும் எஸ். துரைராஜா ஆகியோரும் இந்த ஆயத்தில் இடம்பெற்றுள்ளனர்.

19ஆவது திருத்தத்தின் 3ஆவது பிரிவின் மூலம் அரசியலமைப்பின் 30(2) பிரிவு திருத்தப்பட்டபோதிலும், இந்த திருத்தம் சர்ச்சைக்குரியது என மனுதாரர் வாதிடுகிறார்.


அரசியலமைப்பின் 12 ஆவது அத்தியாயத்தை பரிசீலிக்கும் போது, 19 ஆவது திருத்தம் உரிய முறையில் அமுல்படுத்தப்படவில்லை எனவும் இதனால் அரசியலமைப்பு மீறப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனுதாரரின் கூற்றுப்படி, இந்த திருத்தம் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகளாக குறைத்தது மற்றும் அந்த நேரத்தில் பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்கு பொருந்தும் வகையில் இருந்தது. எவ்வாறாயினும், பதவியில் இருக்கும் ஜனாதிபதியைப் பாதிக்கும் எந்தவொரு திருத்தமும் அரசியலமைப்பின் 12 ஆவது பிரிவின் கீழ் பொது வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும், இது இந்த விவகாரத்தில் நிகழவில்லை.

19ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 2019 நவம்பர் 16ஆம் திகதி கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதாக மனுதாரர் சுட்டிக் காட்டியுள்ளார். சட்டத்திருத்தம் முறையாக நிறைவேற்றப்படாததால், அவரது பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் நீடிக்க வேண்டும். இதன் விளைவாக, பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தவொரு வாரிசு ஜனாதிபதியும் மீதமுள்ள ஆறு வருட பதவிக் காலத்தை வகிக்கவேண்டும். (அ)

# ஜனாதிபதி தேர்தலை பிற்போட வேண்டும்!

### சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை



கொழும்பு, ஜூலை 06

ஜனாதிபதித் தேர்தல் பிற்போடப்படவேண்டும் என்பதே தமது நிலைப்பாடாகும் எனத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் தமிழ் மக்களே பாதிப்புக்குள்ளாவார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கூறினார். (அ)

# குளிக்கச் சென்ற பெண் பொலிஸை வீடியோ எடுத்த கான்ஸ்டபிள் கைது

கொழும்பு, ஜூலை 06

பெண் பொலிஸார் தங்குமிட விடுதி குளியலறையில் குளித்துக்கொண்டிருந்த பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை மறைந்திருந்து படம் பிடித்த ஆண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவை நுவரெலியா மாவட்ட நீதவான் பிரபுதிகா நாணயக்கார பிறப்பித்தார்.

லிந்துலை பொலிஸ் நிலையத்தில் பெண் பொலிஸார் தங்குமிட விடுதி குளியலறையில் குளித்துக்கொண்டிருந்த பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை அதே பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஆண் பொலிஸ் கான்ஸ்டபிள் தனது ஸ்மார்ட் தொலைபேசியில் படம் பிடித்து வைத்திருந்துள்ளார்.

இந்த விடயம் ஏனைய பொலிஸாருக்கு தெரியவந்ததையடுத்து, விசாரணைகள் தொடரப்பட்டு குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் மீது நடவடிக்கை எடுத்து கைது செய்த லிந்துலை பொலிஸார் அவரை நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியுள்ளனர்.

இது தொடர்பான வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி பிரபுதிகா நாணயக்கார சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிளை இம்மாதம் 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்தார்.

# மைத்திரிபால - தயாசிறி உறவில் புதிய திருப்பம்!

கொழும்பு, ஜூலை 06

சு.கவின் பொதுச் செயலாளராக பொறுப்பேற்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கு முன்னாள் ஜனாதிபதியும் சு.கவின் முன்னாள் தலைவருமான மைத்திரிபால சிறிசேன, வாழ்த்துத் தெரிவித்துள்ளடன், ஒன்றாக பயணிப்பதற்கான அழைப்பையும் விடுத்துள்ளார்.

தயாசிறி ஜயசேகரவுக்கு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பில் தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், எதிர்காலத்தில் ஒன்றிணைந்து செயற்பட முடியும் எனவும் கூறியுள்ளார்.

கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக செயல்பட்டதாக குற்றச்சாட்டுகளை சுமத்தி தயாசிறி ஜயசேகரவை பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கியிருந்த மைத்திரிபால சிறிசேன, தற்போது மீண்டும் அவருடன் கைகோர்த்து செயல்படும் வகையில் விடுக்கப்பட்டுள்ள அழைப்பானது சுயநலம் கொண்டதாகும் என சு.கவின் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகர நீக்கப்பட்டமையை எதிர்த்து அவர் தாக்கல் செய்திருந்த வழக்கை விசாரணைக்கு உட்படுத்திவந்த மேல் நீதிமன்றம், சுதந்திரக் கட்சியின் தீர்மானத்துக்கு நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடைக்கால தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆளுநர்களால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நியமனங்கள் இரத்து!

## தேர்தல்கள் ஆணைக்குழு உத்தரவு

கொழும்பு, ஜூலை 06

மாகாண ஆளுநர்களினால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நியமனங்களை உடனடியாக இரத்துச் செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு உத்தரவு பிறப்பித்துள்ளது.

சட்டவிரோத நியமனங்களை உடனடியாக ரத்து செய்யுமாறும், நிலுவையில் உள்ள நியமனங்களை இடைநிறுத்துமாறும் மாகாண ஆளுநர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டம் நடைமுறையில் இருக்கும்வேளையில் இவ்வாறான பதவிகளை வழங்குவது சட்டவிரோதமானது என ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் சூழலில் அரசாங்கம் தமது தேர்தல் தேவைகளுக்காக அரச ஊழியர்களை பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில் சட்டவிரோத நியமனங்களை ஆளுநர்கள் ஊடாக வழங்கி வருவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுவந்த பின்புலத்திலேயே தேர்தல்கள் ஆணைக்குழு இந்த அவசர உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (அ)

# மருத்துவ உபகரணங்கள், தளபாடங்கள் கையளிப்பு

கல்முனை, ஜூலை 06

பி. எஸ். எஸ். பி. திட்டத்தின் கீழ் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள ஆதார மருத்துவமனைகள் உள்ளிட்ட அவசர தேவைகள் உள்ள பிரதேச மருத்துவமனைகள் சிலவற்றுக்கும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை உரிய மருத்துவமனைகளுக்கு கையளிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்தியப் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் நடைபெற்றது.



இதன்போது, சம்மாந்துறை, நிந்தவூர், திருக்கோவில் ஆகிய ஆதார மருத்துவமனைகள் மற்றும் பனங்காடு ஒலுவில், அன்னமலை, இறக்காமம் ஆகிய பிரதேச மருத்துவமனைகளுக்கும் குறித்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிராந்திய பிரிவு தலைவர்கள், சம்மாந்துறை, நிந்தவூர், திருக்கோவில் ஆதார மருத்துவமனைகளின் அத்தியட்சகர்கள், பிரதேச மருத்துவமனைகளின் பொறுப்பு மருத்துவ அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# பாதாள உலக குழுவை சேர்ந்த இருவர் கைது!

பாதாள உலகக் குழுவை சேர்ந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். பாதாள உலக செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 விசேட குழுக்களால் நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடத்தப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த சுற்றிவளைப்பில், பாதாள உலக கும்பலுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் மேலும் 33 பேர் கைது செய்யப்பட்டனர்.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில் உடுகம்பொல பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரின் சுற்றி வளைப்பில் முலட்டியன பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு மறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு மறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org